Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்


இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-12425)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி–18 | 03–08–2005 | புதன் கிழமை | ஓசை–166





------ மட்டக்களப்பு தேசிய எழுச்சி மாநாட்டில் ------

# தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு சர்வதேசத்திடம் அங்கீகாரம் கோரல்

## பெருமளவில் பேராளர்கள் பங்கேற்பு

(மட்டக்களப்பு)

**வவுனியா எழுச்சி மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைக்கோரி நேற்று மட்டக்களப்பு நகரில் மாபெரும் தேசிய எழுச்சி மாநாடு இடம்பெற்றது. இதில் பெருமளவிலான பேராளர்கள் கலந்துகொண்டனர்.**

மட்டக்களப்பு மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலான தேசிய எழுச்சி மாநாடு நேற்று மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்கள், கடந்த புதனன்று வவுனியாவில் இடம்பெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆதரித்ததோடு, அதனை முன்கொண்டு செல்லவும் உறுதி பூண்டனர்.

நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தலைமையில் ஆரம்பித்தன. தேசியக் கொடியை மூன்று மாவீரர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் — விதார் வெள்ளிக்கிழமை சந்திப்பு

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் போர்நிறுத்த உடன்பாடு, அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலவரம் உட்படப் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## தேசிய எழுச்சி மாநாட்டை குழப்ப படையினர், தேசவிரோதிகள் முயற்சி!

### - மாநாட்டு வளாகமருகே குண்டுவெடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற தேசிய எழுச்சி மாநாட்டை குழப்ப அண்மை நாட்களாக சிறிலங்கா இராணுவமும், அதனோடு இணைந்து செயற்படும் தேசவிரோதக்குழுக்களும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. இதன் தொடராக மாநாடு நடைபெறவிருந்த வளாகத்திற்கு அண்மையாக நேரக்கணிப்புக்குண்டொன்று வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

இம்மாநாடு நடைபெறுவதைத் தடுக்க தொடர்ச்சியாக படுகொலை மிரட்டல்கள், குண்டு வீச்சுத்தாக்குதல்கள் என்பன கடந்த ஐந்து தினங்களாக சிறிலங்கா இராணுவ அனுசரணையுடன் இயங்கும் புலனாய்வு அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டன.

எழுச்சி நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்பு மக்களை அச்சுறுத்தும் வகையில் நேரக்கணிப்புக் குண்டு வைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு வாரகாலம் விலகல்

நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் ஆறு வார காலத்திற்கு இலங்கையின் சமாதான முயற்சிகளில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நோர்வேயின் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஊர்காவல் படைச்சிப்பாய் வெலிக்கந்தவில் சுட்டுக்கொலை!

பொலநறுவ வெலிக்கந்த நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் முன்னாள் ஊர்காவல் படைச்சிப்பாயொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.அதே இடத்தைச் சேர்ந்த நால்க்க சம்பத்குமார (வயது - 22) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

தனது மனைவியுடன் வெலிக்கந்த பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடொன்றைச் செய்வதற்காகச் சென்று திரும்பிக்கொண்டிருந்தபோது பொலிஸ் நிலையத்திற்குச் சற்றுத் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உந்துருளியில் வந்த இரண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் படையினர் சுற்றிவளைத்து தேடுதல்!

### - அனைத்து மக்களும் விசாரணை

(திருமலை)

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டை முதலாம், இரண்டாம் வட்டாரங்களில் நேற்று அதிகாலை சிறிலங்காப்படையினர் முழுமையான சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவிடாது அனைவரும் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன் தேடுதலும் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

## மொழிவிருத்தி ஆய்வுகூட கட்டடம் திறந்துவைக்க ஏற்பாடு

கிளிநொச்சியில் மொழி விருத்தி ஆய்வுகூடத்திற்கான புதிய கட்டடம் திறந்துவைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஐந்தாம் திகதி காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி தொழிநுட்பக் கல்லூரி வளாகத்தில் இக்கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளதென பொருண்மிய மதியுரையகத்தினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் தொழிநுட்பக் கல்லூரியில் கணனிப் பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் கல்வி கற்ற மாணவர்களினால் இரு நாட்கள் தொழில் நுட்பம் சார்ந்த கண்காட்சியும் நடாத்தப்படவுள்ளது.

## நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து தமிழ் மொழிமூல பட்டதாரிகள் நியமனம் தொடர்பான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விபரங்கள் 07ஆம், 11 ஆம் பக்கங்களில் பிரசுரமாகியுள்ளன.

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

செல்லத்துரை யோகலிங்கம் என்பவரது அடையாள அட்டை, ஒரு தொகைப் பணம் என்பன புதுக் குடியிருப்பிற்கும், உடையார் கட்டிற்கும் இடையில் பேருந்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத் தவர்கள் மாங்குளம் அரசியல் துறையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். (6510)

### விற்பனைக்கு உண்டு

முத்துஐயன்கட்டு வலதுகரை 2ஆம் கண்டத்திலுள்ள 21ஆம்,22ஆம் இலக்க வயல்காணியும், குடியிருப்புக் காணியும் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு க.நடராசா பத்தர். நாச்சிமார் கோவிலடி. யாழ்ப்பாணம். (5387)

### கணணி வேலைக்கு ஆள்தேவை

Adobe Photo Shop வேலை தெரிந்த நிரந்தர, பகுதி நேர வேலைக்கும் இதில் ஆர்வமுடன் பழகவிரும்புபவர்களும் சுய விபரக் கோவையுடன் நேரில் தொடர்பு கொள்ளவும் யாழ் ஒளி (K.S.RPHO-TOS) இல.05, கனகபுரம் தெரு. கிளிநொச்சி (சந்தைக்கருகில்) (6397)

### கடை விற்பனைக்கு

கிளிநொச்சி பொதுவைத்திய சாலைக்கும், கச்சேரிக்கும் இடையில் கிணறு மலசலகூட வசதியுடன் கடை விற்பனைக்குள்ளது தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி வன்னியன் பல்பொருள் வாணிபம் கச்சேரி முன்பாக, (பிரபா) கிளிநொச்சி. T.P:021-2285776 (6506)

## முக்கிய அறிவித்தல்

01.08.2005ஆம் திகதி முதல் பன்னங்கண்டி பிரதேசத்தில் ஆற்று மணல் அகழ்ந்தேற்றுவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி சட்ட விரோதமாக இப் பிரதேசத்தில் மணல் அகழ்ந்தேற்றுவோர் மீது தண்டப்பணம் ரூபா 5000/= அறவிடப்படுவதுடன், சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாக்கப்படுவார்கள் என்பதை அறியத் தருகின்றேன்.

பொன் நித்தியானந்தன்
விசேட ஆணையாளர்.

(சி-12478)

## முக்கிய அறிவித்தல்

கரைச்சிப் பிரதேச சபையினால் பேணப்படும் உமையாள்புரம் கழிவகற்றும் பிரதேசத்தில் கரைச்சிப்பிரதேச சபையின் அனுமதியின்றி வாகனங்களில் திண்மக் கழிவுகள், திரவக் கழிவுகள் ஏற்றிச் சென்று அகற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இக்கழிவுகளை உமையாள்புரம் கழிவகற்றும் பிரதேசத்தில் அகற்றுவதாயின் அதற்குரிய அனுமதியும், அதற்கான கட்டணம் ரூபா 250/= வும் சபைக்கு செலுத்துதல் வேண்டும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

பொன் நித்தியானந்தன்
விசேட ஆணையாளர்.

(சி-12479)

## முக்கிய அறிவித்தல்

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் (கரைச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகள்) அமைக்கப்படும் சகல கட்டடங்களும் (வீடுகள், வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், சுற்றுமதில்கள், கிணறுகள், மலசலகூடங்கள்) பிரதேச சபையின் அனுமதி பெற்று அமைக்கப்பட வேண்டும். இதனை நடைமுறைப்படுத்த பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளவும். இலகுவான முறையில் விரைவில் தங்களால் அமைக்கப்படும் கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்படும். தயவுசெய்து அனுமதி பெறாமல் கட்டடங்கள் அமைப்பதை நிறுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொன் நித்தியானந்தன்
விசேட ஆணையாளர்.

(சி-12480)

## துயர் பகிர்வோம்

எமது வலயக் கல்விப் பணிமனையில் ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரியும் திருமதி சாந்தினி இராஜேஸ்வரன் அவர்களின் மகள் கௌளினி அவர்கள் அகாலச்சாவைத் தழுவிக் கொண்டமை எம் எல்லோரையும் ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரின் மறைவால் துயருறும் குடும்பத்துடன் நாமும் துயரில் பகிர் கொள்வோம்.

நலன்புரிச் சங்கம்
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

(சி-12474)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்
முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள்
கல்வியாண்டு - 2004/2005

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பின்வரும் BAd/B.Com முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இரண்டாம் வருடம் (பகுதி - I) -17.08.2005 புதன்கிழமை
நான்காம் வருடம் (பகுதி - III) -29.08.2005 திங்கட்கிழமை
மூன்றாம் வருடம் (பகுதி - II) -09.09.2005 வெள்ளிக்கிழமை
முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு -19.09.2005 செவ்வாய்க்கிழமை

பரீட்சைகளுக்கான காலநேர அட்டவணையை பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம். பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை 15.08.2005 திங்கட்கிழமை முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

(சி-12477)



## கண்காட்சி அழைப்பிதழ்

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் நிதி ஆதரவோடு கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நடாத்தப்படும் தொழிற்பயிற்சியின் நிறைவு விழாவும், உபகரணத் தொகுதி வழங்கும் வைபவமும்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

காலம் : 04-08-2005
நேரம் : 10.00 am
இடம் : தொழிற்பயிற்சி வளாகம் (ESDC) அறிவியல் நகர்

றீடோ
நிர்வாகம்

(6515)

## WALK IN INTERVIEW

**solidar**
**An INGO consortium induding NPA, SAH and ASB**

Solidar is consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The solidar network in Sri Lanka comprises of three international NGOs - Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

We are currently at the planning stagc for the Phase 3 Tsunami shelter construction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in Kilinochchi./Paranthan.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please walk in interview on Saturday,6th August 2005 between 01.00 p.m and 5.30 p.m.

**Position: Office Manager**
At least 3-5 years experience in busy office environment.
Good communication skills in both English and Tamil would be essential.
Knowledge in IT skills preferred.

Proven experience in the following
- Organization of multiple departments
- Providing innovative solutions for offiec organization and management
- Managing staff (approx.40)
- Providing support and advise to all staff
- Facilitation communication discussuon between staff and departmentents.

Suitable candidates should be between 30-55 years of age.
Salary would depend on relevant skills and experience.

**Position: Head of Administration**
At least 2 years of experience in a similar role which should include the following.
Staff management and office organization, management of relevant database systems. Good command of written and spoken English would be essential. Working knowledge on Word, Excel. PowerPoint and Access is a requirement.

**Position: Administrative officer**
Provide administrative support to the Head of Administration Duties will include maintenance of filing system, preparation of travel passes, arranging accommodation for guests, photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

Norwegian People's Aid    ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.    Swiss Labour Assistance SAH

**Solidar Office**
**156, Jaffna Road,**
**Paranthan.**

(சி-12476)

# டிஸ்கவரி விண்கலத்தின் வெப்பத் தடுப்பு துணி சேதம்

# பூமிக்குத் திரும்பும்போது ஆபத்து ஏற்படலாமாம்

## விஞ்ஞானிகள் கவலை

(வோஷிங்டன்)

**விண்வெளிக்குச் சென்றிருக்கும் டிஸ்கவரி விண்கலத்திலிருந்து வெப்பத் தடுப்புத் துணிகள் தொங்கிக் கொண்டு இருப்பதால் அது பூமிக்குத் திரும்பும்போது ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.**

விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு ஏழு விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்ற டிஸ்கவரி விண்கலம் கடந்த 26 ஆம் திகதி புறப்பட்டபோது வெப்பத்தடுப்பு தகடுகள் உடைந்து விழுந்துவிட்டன.

அப்போதே, இந்த விண்கலத்தை அனுப்பிய அமெரிக்க 'நாசா' விஞ்ஞானிகள், இந்த விண்கலத்தின் பாதுகாப்புக் குறித்து கவலையடைந்தனர்.

தரையில் இருந்து விண்ணுக்கு பத்திரமாகப் பறந்து சென்ற விண்கலம், சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்தது.


இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கொலம்பியா விண்கலம் விண்வெளிக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது வெடித்து சிதறியது. அதுபோன்ற ஆபத்து ஏற்படக்கூடாது என்பதில் 'நாசா' விஞ்ஞானிகள் கவலை கொண்டுள்ளனர். இதற்கிடையில் விண்கலத்தில் பயணம் செய்த விண்வெளி வீரர்கள் சோய்ச்சி நொகுச்சி, ஸ்டீவ் ராபின்சன், ஆண்டி தோமஸ் ஆகியோர் கடந்த சனிக்கிழமை விண்வெளியில் நடந்து சென்று சேதமடைந்த வெப்பத்தகடுகளைப் பழுது பார்த்தனர்.

இந்த நிலையில் விண்கலத்தின் வயிற்றுப் பாகத்தின் அடிப்பகுதியில் வெப்பத்தடுப்பு துணிகள் இரண்டு தொங்கிக் கொண்டு இருக்கின்றன. இப்படித் தொங்கிக் கொண்டு இருப்பது ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

வெப்பத்தகடுகளுக்கு இடையே உள்ள இடைவெளியை நிரப்புவதற்காக சொரமிக் பைபர் துணி பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் துணி விண்கலத்திலிருந்து பிரிந்து தொங்குகிறது. இப்படித் தொங்குவதால், விண்கலம் பூமிக்குத் திரும்பும்போது வழக்கத்தை விட அதிகமான அளவுக்கு சூடாகி வெப்பத்தடுப்புச் சாதனத்தை செயல் இழக்கச் செய்யும் ஆபத்துள்ளது.

இந்த விண்வெளித் திட்டத்தின் துணை மேலாளர் வெய் கேஹலே இதை அறிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் "இதைச் சரி செய்ய முடியுமா? முடியும் என்றால் என்ன மாதிரி நடவடிக்கை என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆலோசித்து வருகிறார்கள் என்றும் துணி தொங்குவது ஆபத்தை ஏற்படுத்தும் என்பது உறுதியானால் அதைச்சரி செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தகுதியானவர்கள் இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.




நாசா விண்வெளிமையம் செலுத்திய டிஸ்கவரி விண்கலத்தில் பாதுகாப்பு ஓடுகளுக்கு இடையில் வெளியில் தள்ளப்பட்டிருக்கும் வெளி அடைப்பைக் காட்டும் படம்.

## பறவைக் காய்ச்சலை தடுக்க முன்னெச்சரிக்கை

பறவைகளால் பரவும் ஏவியன் தொற்றுக் காய்ச்சலை தடுக்க முன்னெச்சரிகை நடவடிக்கைகள் தேவை என்று இந்திய மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார். புதுடில்லியில் நேற்று முன்தினம் நடந்த தொற்றுக் காய்ச்சலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அவர் தெரிவிக்கையில்,

பறவைகளிடையே காணப்படும் ஏவியன் தொற்றுக்காய்ச்சல் பெரிய அளவில் பரவும் போது பொதுசுகாதாரத்தை பெரிதும் பாதிக்கிறது. இந்நோயால் பாதிக்கப்பட்ட பறவை இனங்களின் அருகில் வாழ்பவர்களுக்கு தடுப்பூசி போடுதல், பாதிக்கப்பட்டுள்ள மனிதர்களுக்கு தற்போது கிடைக்கும் தடுப்பூசிகளைப் போடுவது ஆகியவற்றின் மூலம் பறவைகளிடமிருந்து மனிதர்களுக்கு இந்த நோய் பரவுவதைத் தடுக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

# கன்னட பாடசாலைகளில் ஆரம்பம் முதலே ஆங்கிலம்

கர்நாடக மாநிலத்தில் அரசு மற்றும் தனியார் கன்னடப் பள்ளிகளில் முதல் வகுப்பில் இருந்தே ஆங்கில பாடத்தைப் புகுத்தலாமா? மூன்றாவது வகுப்பில் இருந்து புகுத்தலாமா? என்ற இழுபறிக்கு அரசு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. விரைவில் இது பற்றி முடிவு செய்யப்படும் என்று அறிவித்துள்ளது.

கர்நாடகாவில் உள்ள அரசு மற்றும் தனியார் கன்னடப் பள்ளிகளில் கன்னடம் தான் முக்கியமாக கற்பிக்கப்படுகிறது. ஆனால் சமீப காலமாக ஆங்கிலத்தில் பள்ளி மாணவர்கள் மிகவும் பின்தங்கியிருக்கின்றனர் என்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து ஆங்கில அறிவு இல்லாமல் வேலைவாய்ப்புப் பெற முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், ஆங்கில அறிவை வளர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கர்நாடகாவில் ஏற்கனவே பல தனியார் பள்ளிகள் வந்து விட்டன. எல்லோரும் ஆங்கிலம் தான் கற்றுக் கொடுக்கின்றனர். ஆனால், அரச பள்ளிகளில் இன்னமும் கன்னடம் தான் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்த நிலை மாற வேண்டும் என்று கல்வியாளர்களே கூறி வருகின்றனர். அரச மற்றும் எல்லா தனியார் பள்ளிகளிலும் கன்னடம் முக்கியமாக கற்றுத் தரப்பட வேண்டும். அதேநிலையில் ஆங்கில மும் குழந்தைப் பருவத்தில் இருந்தே கற்றுத் தரப்படவேண்டும் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.

இதுபற்றி அரசு எந்த முடிவும் எடுக்காமல் இருந்தது. ஆனால் கடந்த திங்கள் அன்று சட்டசபையில் பேசிய பள்ளிக்கல்வி அமைச்சர் ராமலிங்க ரெட்டி கூறுகையில், பள்ளிகளில் முதல் வகுப்பில் இருந்து ஆங்கிலம் கற்பிப்பதா, மூன்றாம் வகுப்பில் இருந்து ஆங்கிலம் கற்பிப்பதா என்பது பற்றி விரைவில் அரசு முடிவு செய்யும் என்று அறிவித்துள்ளார்.



அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் உரையாற்றுகிறார் அருகில் அமெரிக்காவுக்கான ஐக்கிய நாடுகள் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள ஜோன் பொல்ட்டன் காணப்படுகிறார்.

## சவுதி அரேபிய மன்னர் மரணம் புதிய மன்னரானார் அப்துல்லாபின்



(ரியாத்)

கடந்த இரண்டு மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சவுதி அரேபிய மன்னர் பத்பின் அப்துல் அஜிஸ் நேற்று முன்தினம் அதிகாலை மரணமடைந்தார். இதனையடுத்து பத்பின் சகோதரர் இளவரசர் அப்துல்லாபின் அப்துல் அஜிஸ், சவுதியின் புதிய மன்னராக நியமிக்கப்பட்டார்.

சவுதி அரேபிய மன்னர் பத்பின் அப்துல் அஜிசின் உடல் நலம் கடந்த மே மாதம் 27 ஆம் திகதி பாதித்தது. ரியாத் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். இரண்டு மாதங்களாக மருத்துவமனையில் இருந்த அவர் சிகிச்சை பலனளிக்காமல் மரணமடைந்தார்.

சவுதி அரேபிய அரசின் தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் அதிகாலை நிகழ்ச்சிகள் இரத்துச்செய்யப்பட்டு, மன்னரின் மரண அறிவிப்பு வெளியிடப்பட்டது. மரண அறிவிப்பை சவுதிச் செய்தி அமைச்சர் இயாத் பின் அமின் மதானி வாசித்தார். உடல் நலம் பாதிப்புக் காரணமாக மன்னர் இறந்துவிட்டார். இரண்டு புனித மசூதிகளின் காப்பாளரான மன்னரை, தனது பரந்த சொர்க்கத்தில் வசிக்க கடவுள் அனுமதித்துள்ளார் என்று இயாத் தெரிவித்தார். மன்னரின் இறுதிச்சடங்கு பிரார்த்தனைக் கூட்டங்கள், ரியாத்தில் உள்ள துர்க்பின் அப்துல்லா மசூதியில் நடைபெற்றது.

மன்னரின் மரணத்தைத் தொடர்ந்து அவருடைய சகோதரரான இளவரசர் அப்துல்லாவின் பின் அப்துல் அஜிஸ், சவுதியின் புதிய மன்னராக நியமிக்கப்பட்டார்.

## மராட்டியத்தில் தொடரும் பெரும் மழை இறந்தோர் தொகை ஆயிரத்தைத் தாண்டியது


மராட்டிய மாநிலம் மும்பை நகர் தொடர்ந்தும் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதில் இறந்தோர் தொகை ஆயிரத்திற்கும் மேல் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்றுவரை மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் இயற்கை அனர்த்தம் காரணமாக அங்கு பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மும்பை நகரம் பெரும்பாலும் செயலிழந்தே காணப்படுகின்றது. நேற்று முன்தினம் ஒருநாள் பெய்தமழை 200 மில்லிமீற்றராகப் பதிவாகியுள்ளதாக வானிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து கடந்த 29 ஆம் திகதி மராட்டிய மாநிலத்தைத் தாக்கியது. இதைத் தொடர்ந்து இரு நாட்கள் பெய்த அடை மழையில் மாநிலம் ஸ்தம்பித்துப் போனது.

மும்பை விமானநிலையம் மூடப்பட்டது. வெளி மாநிலங்களில் இருந்து மும்பை செல்லும் புகையிரதங்களும் மும்பையிலிருந்து வெளிமாநிலம் செல்லும் புகையிரதங்களும் இரத்துச் செய்யப்பட்டன. மும்பை நகரில் போக்குவரத்து முடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் காலை எட்டு மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மட்டும் மும்பையில் 161 மில்லிமீற்றர் மழையும், புறநகர் பகுதியில் 200 மில்லி மீற்றர் மழையும் பெய்துள்ளது.

அத்தோடு அடுத்த 24 மணி நேரத்துக்கு மிகப்பலத்த மழையும், கடல் கொந்தளிப்பும் இருக்கும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது. மராட்டிய மாநிலத்தில் மழையினால் இறந்தோர் எண்ணிக்கை ஆயிரமாக உயிர்ந்துள்ள நிலையில் மும்பை அதன் புறநகர்ப்பகுதியில் மட்டும் 432 பேர் பலியாகியுள்ளனர்.





## சிங்கப்பூரில் அடுத்த ஆண்டு முதல உணவகங்களில் புகைப்பிடிக்கத் தடை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் அடுத்த ஆண்டு யூலை முதல் கிளப்புகள் மற்றும் உணவகங்களில் புகைப்பிடிக்கத் தடை அமுலுக்கு வருவதாக சிங்கப்பூர் அரசு அறிவித்துள்ளது.

சிங்கப்பூரில் வரும் ஒக்ரோபர் முதல் பேருந்து நிறுத்தங்கள், நிழற்குடைகள், பொதுமக்கள் கூடும் இடங்கள், கழிவறைகளில் புகைப்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சிகரெட் விலையை அதிகமாக்கியதுடன் பக்கற்றுகளில் நோய்வாய்ப்பட்ட குழந்தையின் நோய் தாக்கிய உடலுறுப்பின் படத்தை அச்சிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கட்டடம் குடியிருப்புக்களில் புகைப்பிடிப்போருக்கு தனி இடவசதியும் புகையை வெளியேற்ற சிறப்பு வசதியும் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த வசதிகளை செய்ய கால அவகாசம் வழங்கப்படுகிறது. அடுத்த ஆண்டு யூலை முதல் கிளப்புக்கள் மற்றும் உணவகங்களிலும் புகைப் பிடிக்கத் தடை அமுலுக்கு வருகிறது.

சிங்கப்பூரின் மொத்த மக்கள் தொகை 42 இலட்சம். கடந்த 1992 இல் 18 சதவீதம் பேர் புகைப் பிடித்தனர். தற்போது அது 14 சதவீதமாகக் குறைந்துள்ளது. இளம் பெண்களிடம் அங்கு புகைப்பிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருகிறது. பொது இடங்களில் புகைப்பிடிப்பதை கடந்த 2004 இல் முதலில் அயர்லாந்து தடைசெய்தது.

இத்தாலி, நோர்வே நாடுகளிலும் புகைப்பிடிக்க பலவிதமான கட்டுப்பாடுகள் உள்ளன. அமெரிக்காவில் கலிபோர்னியா, புளோரிடா மாகாணங்களிலும், நியூயோர்க் பாஸ்டன் நகரங்களிலும், புகைப்பிடிக்கப் பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. சூடான் நாட்டில் புகையிலைப் பொருட்களின் விற்பனை முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.பு.கழகம் மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(அம்பாறை)

**சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கடந்த 29ம் திகதி வழங்கப்பட்டுள்ளன.**



அம்பாறை மாவட்ட திருக்கோவில் மீன்பிடி கூட்டுறவுச் சமாசக் கட்டடத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக மீன்பிடி அபிவிருத்தி உத்தியோகத்தர் .இ.தினேஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது 84 மீனவர்களுக்கு இந்த மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ்.கரன், மீனவர் கூட்டுறவுச்சங்கத் தலைவர், மீனவப் பரிசோதகர், தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர்களெனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா

(வவுனியா செய்தியாளர்)

ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு வழிகாட்டி என்ற நூல் வெளியீட்டுவிழா கடந்த 26ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வன்னி பத்திரிகையாளர் சங்க தலைவர் ரத்துகமகே, ஊடகவியலாளர் மகாமுனி சுப்பிரணியம் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வவுனியா மேலதிக அரச அதிபர் சாள்ஸ், வவுனியா பிரதேச செயலாளர் செல்வி துரைச்சாமி, மாற்றுக் கொள்கைக் கான ஊடக அமைப்பின் தலைவர் சுனந்த தேசப்பிரிய, சிவில் இராணுவ அதிகாரி கேணல் சேனநாயக்கா வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எம். தென்னக்கோன், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேசி பண்டார, வவுனியா இராணுவ அதிகாரி ஜானக ஆகியோர் கலந்து கொண்டதுடன் படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர்களுக்கான அகவணக்கத்தைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு வழிகாட்டி என்ற நூலை மாற்றுக் கொள்கைகளுக்கான ஊடக அமைப்பின் தலைவர் சுனந்த தேசப்பிரிய வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை வன்னிப் பத்திரிகையாளர் சங்க செயலாளர் மாணிக்கவாசகம் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் வவுனியா, மன்னார், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

(10)

## தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ்

# வவுனியா மாவட்டத்திற்கு நான்கு இணைப்பு காரியாலயங்கள்

இலங்கை அரசாங்கத்தினால் கிராமங்கள் தோறும் தொழில்நுட்பம் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திற்கு நான்கு இணைப்பு காரியாலயங்கள் அமையக்கப்படவுள்ளன. இதன் படி சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு இணைப்பு காரியாலயங்களும் வவுனியா தமிழ் பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு இணைப்பு காரியாலயங்களும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் படி ஒவ்வொரு காரியாலயத்திற்கும் இரண்டு கணனிகள், தொலைபேசி இணைப்பு தொலைநகல் இயந்திரம் ஆகியன வழங்கப்பட இருக்கின்றன.இதற்கான செலவுகள் அனைத்தையும் அரசாங்கம் வழங்கவுள்ளது. நான்கு வருடத்திற்கு இந்த நடைமுறை இருக்கும் என்றும் இலங்கை பிரதமரின் நேரடி கவனிப்பின் கீழ் அமையும் என்றும் தென்பகுதியில் இந்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியாவிலும் விரைவாக ஆரம்பமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

(21)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு யு.எஸ்.எயிட் நிறுவனம் உதவி

வடக்கு, கிழக்கில் கிளிநொச்சி, மட்டக்களப்பு, காத்தான்குடி ஆகிய பிரதேசங்களில் கடற்கோள், யுத்தம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வதிவிடங்களை நிர்மாணித்துக் கொடுப்பதில் யு.எஸ். எயிட் நிறுவனம் அளப்பரிய பங்கினை ஆற்றி வருகின்றதென ஐக்கிய நாடுகள் வதிவிட காத்தான்குடி நகர முகாமையாளர் முன்னாள் அரச அதிபர் கே.எம். சரீப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

காத்தான்குடி நகர காரியாலயத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இலங்கை யு.எஸ். எயிட்டின் தலைவரும், திட்டப் பணிப்பாளருமான கபிலஸ் பெர்னாண்டோ, நிர்வாக அதிகாரி அஸ்ஸெய்க் ஏ.எல்.எம்.ஸஹீல், பொறியியலாளர் எம்.எச்.எம்.அஜ்வத் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

சமீபத்தில் இடம்பெற்ற இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த சரீப் தமதுரையில்; கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமது பணியினைப் பாதிப்புக்குள்ளான மக்களை மையமாக வைத்தே எமது யு.எஸ்.எயிட் சேவையாற்றி வருவதாகத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் திருச்செந்தூர் மட்டிக்கழி, அமிர்தகழி ஆகிய பகுதிகளிலும் 132 வீடுகளும், வீதிகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதற்குப் பொறுப்பாக மட்டக்களப்பு நகர முகாமையாளர் எஸ்.ஜெயராம் நியமிக்கப்பட்டு வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 43 வீடுகளும், கிளிநொச்சியில் 40 வீடுகளும், காலி மாவட்டத்தில் 567 வீடுகளும், காத்தான்குடியில் 236 வீடுகளுமாக மொத்தம் 1018 வீடுகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

வீடுகளை அமைக்க அரச உதவிக்கு மேலதிகமாக யு.எஸ்.எயிட் நிறுவனம் தலா ஒரு வருக்கு இரண்டு இலட்ச ரூபாவை வழங்கி வருகின்றது. இவ் வீடுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற வீடுகள் யாவும் இம் மாதம் 15 ஆம் திகதிக்கிடையில் முடிவடையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சமூக வலுவூட்டாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் கிராம தரிசிப்பும்

(முள்ளியவளை)

முல்லை. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்ட சமூக வலுவூட்டாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் வேலைத் திட்டக் கிராம தரிசிப்பும் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

சமூக வலுவூட்டாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஒன்றுகூடல் மண்டபத்தில் த.பு கழக நிகொட் திட்ட மாவட்ட சமூக வலுவூட்டாளர் ர.சத்தியதீபா தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

சமூக வலுவூட்டாளர்களின் கடமை, மக்களுடன் பழகிக் கொள்ளும் அணுகுமுறை, மக்களின் தேவைகளை இனங்காணுதல், பணிக்கப்படும் வேலைத்திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப் படுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கி பயிற்சியினையும் மற்றும் கருத்துரையினையும் முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆலோசகர் பாலசுப்பிரமணியம் நிகழ்த்தினார். தொடர்ந்து குரவயல் கிராமத்தில் த.பு.கழக நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீடுகள் அமைத்தல் பொது மண்டபம் பொதுக் கிணறு, பொது மலசலகூடம் என்பன அமைக்கப்படும் வேலைத் திட்டங்களை முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் எம்.ஆர்.மூர்த்தி, சமூக வலுவூட்டாளர்கள் நிகொட் திட்டப் பணியாளர்கள் ஆகியோர் பார்வையிட்டுஅக் கிராம மக்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்துள்ளனர்.

மேற்படி நிகழ்வில் வைத்து அக் கிராம மக்களின் ஜீவனோபாயக் கடன் வழங்கலுக்கான சமூக அபிவிருத்தி வங்கிக்கணக்கு புத்தகங்கள் அக்கிராம மக்களிடம் வழங்குவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் அக் கிராமத்தில் தையல் பயிற்சி வகுப்புக்கள் வருமான அதிகரிப்பு திட்ட செயற்பாடுகள் என்பன பற்றி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆலோசனையில் சமூகவலுவூட்டாளர்களால் விழிப்புணர்வூட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஆ)

# சமுர்த்தி சீட்டிழுப்புமூலம் மட்.மாவட்டத்திற்கு 170 வீடுகள்

மட்டு. சமுர்த்தி வீட்டு அபிவிருத்திச் சீட்டிழுப்பு 2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை ஆறு சீட்டிழுப்பு சமுர்த்தி அதிகார சபையினால் இடம்பெற்று இற்றை வரை 170 வீடுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிடைக்கப் பெற்றுள்ளதாக மாவட்ட சமுர்த்தி ஆணையாளரும், பிரதிப் பணிப்பாளருமான இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மண்முனை வடக்கு மட்டக்களப்புக்கு 21 வீடுகளும், காத்தான்குடிக்கு 12 வீடுகளும், ஆரையம்பதிக்கு 13 வீடுகளும், களுவாஞ்சிக்குடிக்கு 13 வீடுகளும், ஏறாவூர் நகருக்கு பத்து வீடுகளும், ஏறாவூர் பற்றுக்கு 30 வீடுகளும், வாழைச்சேனைக்கு எட்டு வீடுகளும், வாகரைக்கு ஐந்து வீடுகளும், பட்டிப்பளைக்கு 16 வீடுகளும், வெல்லாவெளிக்கு ஒன்பது வீடுகளும், வவுணதீவுக்கு எட்டு வீடுகளும், கோறளைப்பற்று மத்திக்கு இரண்டு வீடுகளும், கிரானுக்கு எட்டு வீடுகளும், கோறளைப்பற்று மேற்குக்கு 15 வீடுகளும் கிடைத்துள்ளன.

ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இதுவரை நான்கு சுற்றுக்களாக இடம் பெற்ற சீட்டிழுப்பின் காசோலைகள் அரச அதிபர் வே.சண்முகத்தினால் வழங்கப்பட்டது.

இறுதியாக ஆறாவது சுற்றுச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்கள் 59 பேருக்குக் கடந்த 29 ஆம் திகதி மட்டக்களப்புக் கச்சேரியில் வைத்து மட்டக்களப்பு மாவட்டப் புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். அமீரலியினால் காசோலைகள் வழங்கப்பட்டன.

இவ் வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் வே.சண்முகம், பிரதி சமுர்த்தித் திட்டப் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன், மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கனகசபை, எஸ்.ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், தங்கேஸ்வரி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கண்டாவளை மகாவித்தியாலயத்தில் வருடாந்த பொருட் காட்சி நிகழ்வு

கிளி/ கண்டாவளை மகாவித்தியாலயத்தில் வருடாந்த பொருட் காட்சி நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. காலை 9.30 மணிக்கு வித்தியாலய முதல்வர் சி.சிறிதரன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மங்கல விளக்கினை கண்டாவளை கிராமசேவை உ[illegible]யோகஸ்தர் இ.சண்முகநாதன் [illegible]சாலை அபிவிருத்திச் [illegible] செயலாள[illegible] மா.ஸ்ரீகணநாத[illegible] ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியை கிளிநொச்சி [illegible]பக் கல்வி[illegible] த.குரு[illegible]சா ஏற்றி வைத்தார். [illegible]லக் கொடியை பாடசாலை [illegible] ஸ்ரீதரன் [illegible] பொருட்காட்சி மண்டபத்தை முதன்மை விருந்தினர் மூத்த கிராம உத்தியோகஸ்தர் சி.பரமதாஸ் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்து பொருட்காட்சியைப் பார்வையிட்டனர்.

பொருட்காட்சியில் விவசாயம் நீர்ப்பாசனம் இலத்திரனியல் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகள் கைத்தொழில் முயற்சிகள் பனை, தென்னை, கைப்பணிப் பொருட்கள் எனப் பல வகையானவற்றை மாணவர்கள் திறம்படச் செய்து காண்பித்தனர்.

இதில் ஆரம்பப் பிரிவு மாணவர்களும் உயர்தர வகுப்பு மாணவர்களும் வெவ்வேறாகப் பொருட்களை வைத்திருந்தனர்.

# சனாதிபதி சாரணர் விருது திருமலையில் ஒரு மாணவனுக்கு மட்டும்

சனாதிபதி சாரணர் விருது இவ்வாண்டு திருகோணமலை மாவட்டத்தில் ஒரேயொரு மாணவனுக்குக் கிடைத்திருக்கின்றது. திருகோணமலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் அழகுராஜா தினேஷ் என்பவருக்கே இது கிடைத்துள்ளது.

தினேஷிற்கு சனாதிபதி சாரணர் விருதைச் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அப் பாடசாலையின் அதிபர் என். ராஜநாதன் தலைமையில் நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட சாரணர் ஆணையாளர் ராஜாரஞ்சன் சனாதிபதிச் சாரணர் விருதை மாணவன் தினேஷிற்குச் சூட்டினார்.

நிகழ்வில் திருமலை மாவட்ட பெண் சாரணிய ஆணையாளர் செல்வி கோ. பொன்னம்பலம் உதவி ஆணையாளர்கள் பத்மசீலன், ரகுராம் ஆகியோரும் பங்கு பற்றினர்.

# புதிய நிர்வாகம் தெரிவு

(முல்லைத்தீவு)

சுனாமிக்குப் பின்னரான முல்லைத்தீவு மகா வித்தியாலய வளர்ச்சியினை கருத்திற் கொண்டு கடந்த 23 ஆம் திகதி முல்லை மகாவித்தியாலய தற்காலிக கட்டடத்தில் பழைய மாணவர்களின் புதிய நிர்வாகத் தெரிவு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்ற இப் புதிய நிர்வாகத்தின் தலைவராக அதிபரும், செயலாளராக ச.எட்வின் நேசரட்ணமும், பொருளாளராக, செ.றெஜீஸ்விமலேந்திரனும், உபசெயலாளராக அ.வி. சஞ்சுனிதாஸ் உட்பட 11 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் முக்கியமாக பாடசாலைக்குப் புதிய கட்டடம் அமைத்தல் புதிய காணி பற்றிய நிலைப்பாடுகள் தொடர்பாக முழுமையாக ஆராயப்பட்டன. இந்தக் கலந்துரையாடலில் பெருமளவான பழைய மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(20)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் மீளக்கற்றல் செயற்பாடு முழுமைபெறவில்லை

## - கல்வி அதிகாரிகள் அரச அதிபருக்கு மகஜர்

(வடமராட்சி)

**கடந்த சுனாமி கடற்கோள் அனர்த்தத்தின் போது முழுமையாகவோ அல்லது பெரும் அழிவினையோ சந்தித்த யாழ்.மாவட்ட பாடசாலைகளில் மீளக் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க ஏதுவாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் விடயம் அனர்த்தம் ஏற்பட்டு ஏழு மாதங்கள் பூர்த்தியாகிவிட்டபோதும் முழுமை பெறவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.**

இது தொடர்பாக கல்வித்திணைக்கள அதிகாரிகளால் யாழ். அரச அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம் மற்றும் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை. அதேபோன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்கிலுள்ள ஏழு பாடசாலைகளுமாக மொத்தம் ஒன்பது பாடசாலைகள் மாற்றிடங்களில் நிறுவ முடிவுசெய்யப்பட்டிருந்தது.

அதற்கான நிதியை யுனிசெப்அமைப்பு வழங்கவும் முன் வந்திருந்தது. தெரிவு செய்யப்பட்ட இடங்கள் கரையோரப் பகுதிகளிலிருந்து 300மீற்றர் தூரத்திற்கு அப்பால் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மாணவர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் தற்காலிக தகரக் கொட்டகைகளும் அமைத்து வழங்க இந்நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும் சுனாமி அனர்த்தமேற்பட்டு பல மாதங்களைக்கடந்துவிட்டபோதும், அப்பணிகள் முழுமை பெறாமையினால் கற்றல் செயற்பாடுகளை முழுமையாக ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் யாழ். அரச அதிபரது கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

எனினும் மொத்தமாக இப்பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் 91 தேவையென மதிப்பிடப் பட்டுள்ள போதும், இதுவரை 86 கொட்டகைகளே தயார் செய்யப்பட்டுள்ளதாக கல்வித்திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள பாடசாலைகளில் பாரிய சேதங்களை சந்தித்த ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ.க.த.பாடசாலை,கட்டைக்காடு றோ.க.த.க, மாமுனை அ.த.க.பாடசாலை, செம்பியன் பற்று றோ.க.த.க. பாடசாலை, தாழையடி றோ.க.த.க. பாடசாலை ஆகியன இவ்வாறு புதிய இடங்களிற்கு நகர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

# யாழ்.இல் இருந்து கொழும்பு சென்றவரை காணவில்லையென முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் சென்ற வத்தளையைச் சேர்ந்தவர் புறப்பட்டு 16 நாட்களாகியும் கொழும்புக்கு செல்லவில்லையென யாழப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.கொழும்பு வத்தளையை இருப்பிடமாகக் கொண்ட முருகேசு ரமேஸ் (வயது-38) என்பவரையே காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உறவினர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.இது சம்பந்தமாக யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் (41)

# படையினர் விடுவித்த இடங்களில் மிதிவெடிகளால் ஆபத்து

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள மறவன்புலோ தனங்கிளப்பு. கோயிலாக்கண்டி பிரதேசங்களில் படையினரால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் இடங்களில் படையினரால் புதைக்கப்பட்ட மிதி வெடிகளால் ஆபத்துக்கள் இருப்பதாக இப் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வயல் பகுதிகளிலும், கடற்கரை பகுதிகளிலும் இத்தகைய ஆபத்துக்கள் இருப்பதாகவும் பொது மக்களின் குடியிருப்பின் சில பகுதிகளிலும் இத்தகைய வெடிபொருள் ஆபத்து இருப்பதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

# 170 கடற்றொழிலாளர்களுக்கு கெயார் நிறுவனம் உதவி

(மாதகல்)

யாழ்.மாதகல் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் 170 பேருக்கு கெயார் சர்வதேச தொண்டர் அமைப்பு தொழில்துறை மேம்பாட்டிற்கான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.இதில் முதற்கட்டமாக இக் கடற்றொழிலாளர்களுக்கு இந் நிறுவனம் தலா ஒவ்வொரு மீன் பிடி வலைகளை வழங்கியுள்ளது.

இதைவிட இவர்களுக்கு தலா ஒவ்வொரு கண்ணாடி இழைப் படகுகளையும் அவற்றுக்கான இயந்திரங்களையும் இவ் அமைப்பு வழங்கவுள்ளது. (33).

# கழிவு கொட்டுமிடம் படையினரால் ஆக்கிரமிப்பு; சாவகச்சேரி கழிவகற்றலில் பெரும் நெருக்கடி

## - நகரசபை செயலாளர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் தேங்கும் குப்பைகளை அகற்ற வாகன வசதியும், குப்பைகளை போடுவதற்கான இடவசதியும் இல்லாமையால் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

குப்பை போடும் இடம் தற்பொழுது இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதால் குப்பைகளைப்போட படையினர்அங்கு அனுமதி மறுத்து வருகின்றனர். குப்பைகள் அள்ளுவதற்கு ஒரே ஒரு உழவு இயந்திரமே உள்ளது. அந்த உழவு இயந்திரமே குப்பை அள்ளுவதற்கும், தண்ணீர் தாங்கியை இழுத்துச் செல்வதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நகரத்தில் சேரும் குப்பைகள் நகரசபை அலுவலகத்திற்கு முன்னால் உள்ள வெளிப்பகுதி ஒன்றிலேயே கொட்டப்பட்டு எரியூட்டப்படுகின்றது எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (28)

# நல்லூர் பிரதேச சபைக்கு கழிவகற்றல் உழவு இயந்திரம்

(நல்லூர்)

யாழ்.நல்லூர் பிரதேச சபைக்கு கழிவு காவிப் பெட்டிகளுடன் கூடிய உழவுஇயந்திரம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சிறுவர்பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) வழங்கவுள்ளது.

நல்லூர் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவகற்றல் நட வடிக்கைகளுக்கு போதியளவு உழவு இயந்திர வசதிகள் இன்மையால் நிலவிவந்த பாதிப்புக்களை போக்குவதற்காகவே இவ் உழவு இயந்திரத்தை ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கவுள்ளது. (33)

# குடிநீர் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை; யாழ். மாவட்டத்தில் தீர்க்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற குடிநீர் வழங்கல் பிரச்சினைகள் மற்றும் சுகாதாரப்பிரச்சினைகள் என்பனவற்றை தீர்த்துவைப்பதற்கான உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

இதற்கான உதவிகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷின் சிபார்சின் அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளூடாக வழங்கவும் அது உறுதியளித்துள்ளது.

இதுசம்பந்தமான முக்கிய கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணிக்கு யாழ் அரச செயலகத்தில் நடைபெற்றது. அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரிகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

இதில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகள் தமது அதிகாரப் பிரதேசத்துள் குடிநீர் வழங்கலை மேற்கொள்வதிலும் கழிவுகளை அகற்றி சுகாதாரத்தைப் பேணுவதிலும் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதால் இதற்கு உரிய தீர்வு காணப்படுவது அவசியமென யாழ். அரச அதிபரால் வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இவ் உதவியை வழங்க உறுயளித்துள்ளது. (33)

# யாழ்.இல் அரசாங்கக் காணிகளை இனம்காணும் நடவடிக்கை துரிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்கக்காணிகளை இனம்காணும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கூறியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருக்கும் அரசாங்கத்துக்குச்சொந்தமான காணிகளை இனங்கண்டு அவற்றை காணி இல்லாது அல்லற்படும் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காகவே இக்காணிகள் இனங்காணப்பட்டு வருகின்றன இதற்கான நடவடிக்கைகளில் விசேட அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். இவ்இனங்காணும் நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு .இனங்காணப்படும் அரசாங்கக் காணிகள் காணி இன்றி அல்லற்படுகின்ற குடும்பங்களை தெரிவுசெய்த பின்னரே பகிர்ந்தளிக்கப்படும் என்றும் கூறினார். (33)

# குடாநாட்டில் குடிசைத்தொழில்கள் அருகிவிட்டதாக கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் குடிசைத் தொழில்கள் தற்பொழுது அருகி விட்டதாக குடிசை தொழில்கள் மேம்பாட்டு வாரியம் கவலை தெரிவித்துள்ளது.

இப் பகுதியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம், பனம் சீனி, கயிறு, கடகம், பாய், தேங்காய்எண்ணை, சுருட்டு முதலான பொருட்களின் உற்பத்தி வெகுவாக குறைந்து இருப்பதுடன் குடிசைத் தொழில்கள் மீதான மக்களின் ஆர் [illegible] வெளிநாட்டு, உள்நாட்டு இறக்குமதிகளால் கணிசமான அளவு குறைந்து இருக்கின்றது.

தொடர்ச்சியான இடப்பெயர்வுகளினால் இத்தொழில்களில் ஈடுபட்டு வந்தோர் பலர் குடும்பங்களுடன் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வருவதும் இத்தொழில் வீழ்ச்சிக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# 15 வருடங்களின் பின்னர் ஐவரில் ஒருவர் சலரோக நோயாளி

(யாழ்ப்பாணம்)

இன்னும் பதினைந்து வருடகாலத்தில் நாம் சந்திக்கும் ஐந்து பேரில் ஒருவர் சலரோக நோயினால் பாதிக்கப்பட்டவராகக் காணப்படுவார்.இந் நிலைமை ஏற்பட முன்னர் தடுத்து நிறுத்த நடவடிக்கை யெடுப்பது சிறந்ததாகும் என உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக்கான வட மாகாணப் பிரதிநிதி வைத்திய கலாநிதி க. சிவராசா தெரிவித்துள்ளார்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் சலரோக சிகிச்சை நிலையத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

ஏற்கனவே சலரோக நோய்க்கு பலர் உள்ளாகியுள்ள போதிலும் குறிப்பாக தமிழ் மக்களிடையே அதிகமாக ஏற்படக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. இது மேலும் அதிகரிக்காமல் இருக்க வேண்டுமாக இருந்தால் நோய் வந்தபின் நோய்க்குச்செலவு செய்யும் பணத்தில் ஒரு பகுதியை முதலில் செலவு செய்து நோயைக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது விட்டால் இதனைஇன்னும் பின் தள்ளவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கூடிய பலனைப்பெற முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (41)


# கூட்டுறவாளர் தினவிழா மாநாடு யாழ்.இல் சிறப்பாக அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவாளர் தினவிழா மாநாடு மிகவும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.பாராளுமன்ற உறுப்பினர்களான மு.சிவனேசன் சுரேஸ் பிறேமச்சந்திரன் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே.கணேஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்

இதேவேளை, கூட்டுறவாளர் நிகழ்வையொட்டி இடம்பெற்ற ஊர் வலத்தில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்து கொண்டார்கள்.

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்பாக இருந்து ஆரம்பமாகிய இவ் ஊர்வலம் மானிப்பாய் வீதிவழியாக மருதனார்மடத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

கூட்டுறவாளர் தினத்தையொட்டி இந் நிகழ்வுகள் கடந்த 31ஆம் திகதி இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும். (41)





# புலிகள் பலம் பெற்றிருக்காதிருந்தால் தமிழ் மக்களின் அழிவை யாராலும் தடுத்திருக்க முடியாது ---------

**வவுனியாவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டில் " தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இனப் படுகொலைகள்" என்ற தலைப்பில் சமர்ப்பிக் கப்பட்ட ஆய்வுக் கட்டுரை.**



இலங்கைத்தீவின் வரலாறு அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக பௌத்த மதத்துக்கு முதலிடமும், புத்த சாசன அமைச்சினூடாக பஞ்சசீலக் கொள்கைகளுக்குப் பிரத்தியேக இடமும் கொடுக்கப்படுவதாக கூறப்படுகின்ற போதிலும் அது நடைமுறையில் பெருமளவுக்கு படுகொலைகளால் அறியப்படும் வரலாறாகவே இருந்து வருகின்றது. இந்த தவிர்க்க முடியாததும், சகிக்க முடியாததுமான துர்ப்பாக்கியமான நிலைக்கான அத்திவாரம், இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பான காலத்திலேயே இடப்பட்டு இருக்கின்றது.

அப்போதிருந்தே இந்த நாட்டை ஆளத் தலைப்பட்ட சிங்களத் தலைவர்கள், சிங்கள பௌத்த தேசியம் கொண்ட ஒரு நாடாகவே இலங்கையை வைத்திருக்க முயன்றிருக்கின்றார்கள். அதனை நடைமுறையில் பேணுவதற்குச் சிறுபான்மை இனங்களை அச்சுறுத்தி வைத்திருத்தல் என்ற உத்தியை கையிலெடுத்திருக்கின்றார்கள். இது 1883இல் ஆரம்பித்தது. வர்த்தகத்தில் ஈடுபட்ட மலையாளிகளுக்கு எதிராக இந்த நிலைப் பாட்டை அநகாரிக தர்மபாலா, ஏ.ஈ.குணசிங்கா போன்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிதாமகன்கள் முன்னெடுத்துச் சென்றார்கள். அதனை பின்வந்த சிங்களத் தலைவர்களும் தொடர்ந்தார்கள்.

அதற்காக அவர்கள் பிரயோகித்த மிகப் பயங்கரமான ஆயுதமாக இனப்படுகொலைகளே அமைந்தன. அதனை இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தை அச்சுறுத்திப் பணிய வைக்கும் தந்திரமாகவே கையாண்டனர். ஆனால், அந்தப் படுகொலைகளை நிகழ்த்திய அரச பயங்கரவாதத்தை, தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திய போராட்டம் மூலம் எதிர்கொள்ளத் தொடங்கிய போது, சிங்களத் தலைமைகளின் திட்டங்கள் ஆட்டம் கண்டன.

இலங்கை என்ற நாட்டுக்குள் தமிழ் மக்கள் இணைந்து வாழ முடியாது என்ற முடிவை எடுக்க வேண்டி ஏற்பட்ட போது அதற்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டமையும் ஒரு காரணமாக முன்னின்றது. அதனை எதிர்கொள்ளவோ ஜீரணிக்கவோ திராணியற்ற சிங்களத் தலைமைகள் இன்னும் இன்னும் இனப்படுகொலைகளையே பல்வேறு வடிவங்களில் முன்னெடுத்தன.

வயலில், கடலில் தொழிலில் ஈடுபடும் போது, தரை வழி, கடல் வழி போக்குவரத்தில் ஈடுபடும் போது, சொந்தக் குடியிருப்புக்களில், இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருந்த போது எனப் பல்வேறு வகையிலும் இனப்படுகொலைகள் இடம்பெற்றன.

இனப்படுகொலைகளின் தொடக்க கால அரசுத் தலைவலராக இருந்த டி.எஸ்.சேனநாயக்கா, அவரைத் தொடர்ந்து வந்த டட்லி சேனநாயக்கா, சேர்.ஜோன் கொத்தலாவல, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த் தனா, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜேயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆகிய அனைத்து தலைவர்களினது காலங்களிலும் தமிழினப்படுகொலைகள் இடையறாது நிகழ்ந் திருக்கின்றன.

இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலில் பிரதானமானதாக இருந்து வந்த படுகொலையினை ஒவ்வொரு தலைவர்களும் தத்தமது கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிகழ்த்தியுள்ளனர். ஆயினும், அவை ஒருவரை விஞ்சியதாக மற்றவர் காலத்தில் நடந்திருப்பது தமிழ் மக்கள் எதிர் கொண்ட மிகப் பெரும் சவாலாகும்.

சிறிலங்கா அரசு கட்டவிழ்த்து விட்ட இப்படுகொலைகள் ஒரு அரச பயங்கரவாதமாக பரிணாமமடைந்த போது, இதனை எதிர்கொள்ள, தமிழ் மக்கள் மேற்கொண்ட போராட்டங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளாகச் சித்திரிக்கப்பட்டன. அதற்கான சட்ட உருவாக்கங்களும் சிங்களப் பிரதிநிதித்துவத்தை பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

1979ஆம் ஆண்டு தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை அரச பயங்கரவாதத்தினூடாக ஒடுக்குவதற்கும் தமிழினப் படுகொலையை பல்வேறு தளங்களில் விரிவாக்குவதற்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனக்கிருந்த பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி நிறைவேற்றினார். அது தொடர்ந்தும் இற்றைவரை நடைமுறையில் உள்ளது. பேரினவாதக் கட்சிகள் மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றினாலும் இந்தச் சட்டத்தின் கீழ் எந்த மாற்றமும் நிகழவில்லை.

இந்தச் சட்டம் தென்னாபிரிக்காவில் போத்தா (Botha) அரசின் மிக மோசமான நிற ஒதுக்கல் சட்டத்தை விடப் பயங்கரமானது என சர்வதேச யூரர்- சபை, சர்வதேச மன்னிப்புச் சபை போன்றன எடுத்துக்காட்டி நீக்கும்படி கோரிய போதும், சிங்களத் தலைமைகள் இம்மியும் அசையவில்லை. இதன் மூலம் அரச பயங்கரவாதம் மேற்கொண்ட சகல இனப்படுகொலைகளும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளாகவே உலகின் முன் கொண்டு செல்லப்பட்டன.

கிழக்கு மாகாணத்திலும் வடக்கிலும் நடந்த மிகப் பெரும் படுகொலைகளும் இவ்வாறே நியாயப்படுத்தப்பட்டன; அல்லது மூடிமறைக்கப்பட்டன. ஆலயங்களிலும் அகதி முகாம்களிலும் கூடியி[illegible]ந்த தமிழர்கள் மீதும், சிகிச்சைக்காக நோயா[illegible]கள் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைகள் மீதும் மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது பாடசாலைகள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் உயிர்கள் [illegible]க்கப்பட்ட போதும் அந்த சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டன; இது பெண்கள், குழந்தைகள், மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள் என்று வேறுபாடில்லாமல் தமிழர்கள் என்பதற்காக அனைத்து தரப்பினர் மீதும் பிரயோகிக்கப்பட்டது.

சிங்களத் தலைமைகள் தமது அரசியல் ஆதாயத்துக்காக அரசியல் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொண்ட தமிழினப் படுகொலைகள் மிகக் குரூரமானவையாக - மனிதாபிமானம் அற்றவையாக இருக்க வேண்டும் என்பதிலும் அக்கறை காட்டியே வந்துள்ளன. இதற்கு 83 ஜூலை 11இல் ஜே.ஆர். லண்டன் டெலிக்கிராப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி நல்லதொரு சான்றாகும்.

'நான் யாழ்ப்பாணத்து மக்களுடைய அபிப்பிராயங்களைப் பற்றி கவலைப்பட மாட்டேன்; அவர்களது உயிர், உடமைகளைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன்: எனது அரசாங்கம் எதைச் செய்ய வேண்டுமென முடிவெடுத்து விட்டதோ அதைச் செய்தே தீரும்'' என்று கூறியிருந்தார்.

சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனை இலங்கைத்தீவு முழுவதும் பௌத்த சிங்கள நாட்டுக்குரியது என்பதாக கட்டி வளர்க்கப்பட்டு வர, காலத்துக்குக் காலம் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. குற்றவியல் சட்டங்களினால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்கள், ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்டு தமிழர் நிலங்களில் குடியேற்றப்பட்டனர்.

இச்சிங்களக் குடியேற்றமானது 1940இல் ஆரம்பிக்கப்பட்ட போது, அப்போதைய காணி, விவசாய அமைச்சரான டி.எஸ்.சேனநாயக்கா அரச மரக் கன்றொன்றை நாட்டிய பின் ஆற்றிய உரை கவனத்திற் கொள்ளத்தக்கது;

'இன்று நாட்டப்படும் இந்த அரச மரம் வளர்ந்து பெருவிருட்சமாகும் போது இந்த மண்ணில் உங்களைத் (குடியேற்றப்பட்ட சிங்களவரைத்) தவிர வேறெவரும் குடியிருக்கக் கூடாது" இவ்வாறு குடியேற்றப்பட்டவர்கள் பலர் குற்றச்செயல்களில் ஈடுபட்டு நீண்ட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய குற்றவாளிகளாவர். அவர்களைக் கொண்டு வந்து தமிழர்களின் எல்லைப் புறக்கிராமங்களில் குடியேற்றியதன் மூலமாக தமிழினப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் தமிழர் வாழ்விடங்கள் துண்டு போடப்பட்டு கபளீகரம் செய்யப்பட்டன. அத்துடன் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் இராணுவ மயப்படுத்தப்பட்டு அன்றாடம் தமிழ் மக்கள் தனித்தனியாகவும் கூட்டமாகவும் கொல்லப்படும் சம்பவங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

தமிழ் மக்கள் மீதான முதல் இனப் படுகொலை தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட தினமான 1956 ஜூன் 5ம் திகதி நடைபெற்றது. அம்பாறை கல்லோயாவில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் அக்கிராமத்தில் பூர்வீக வாசிகளான தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பின் போது 150 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். அன்றைய தினமே ஒடுக்குமுறையின் இன்னொரு வடிவமான பாலியல் வன்முறை சம்பவமும் ஆரம்பமானது.

தமிழர்களுக்கு தென்னிலங்கையில் மட்டுமல்ல, தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல சிறைச்சாலைகளிலும் கூட பாதுகாப்பு இல்லை என்பதையும் சிறிலங்கா அரசு காலத்துக்கு காலம் நிரூபித்து வந்தது. வெலிக்கடைச் சிறை, பூசா, களுத்துறை, பெலவத்தை, பிந்துனுவெவ தடுப்பு முகாம்கள், திருகோணமலைச் சிறை போன்றவற்றில் நடைபெற்ற தமிழர் படுகொலை தொடர்பாக எவருமே தண்டிக்கப்படவில்லை. வெலிக்கடைச் சிறையில் 1983 ஜூலை 25இல் 35 தமிழர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் ஜூலை 27இல் அதே சிறையில் எஞ்சியோர் பதினெட்டுப் பேர் படுகொலை செய்யப்படக் கூடியதாக இருந்ததென்றால் தமிழர்களின் உயிர் தொடர்பாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நிலைப்பாடுகள் எவ்வாறிருந்தன என்பதை உணர முடியும்.

இவ்வாறு நீண்ட இந்த இன அழிப்பு முயற்சிகளினால் இதுவரை அறுபதினாயிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயினும், இவற்றால் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தடைப்படவில்லை. மாறாக அது முனைப்படைந்து கூர்மை பெற்றுள்ளது. இவ்விடுதலைப் போராட்டம் இன்று அரசியல், இராணுவ தளங்களில் மிகப்பலம் மிக்கதாக பரிணாமமடைந்துள்ளது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவை வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் இதனை புலமைசார் நிலையில் வலியுறுத்தி வருபவர்களும் ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்படும் துர்ப்பாக்கிய நிலையை சிங்களப் பேரினவாதம் அண்மைக் காலமாகத் தீவிரப்படுத்தியுள்ளது.

சட்டமேதை குமார் பொன்னம்பலம், ஊடகவியலாளர்களான மயில்வாகனம் நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்ணம் சிவராம் போன்றவர்களுடைய படுகொலைகள் சிங்களப் பேரினவாதத்தின் அகோர முகத்தின் வெளிப்பாடுகளாகும்.

தமிழினப் படுகொலைகளுக்காக உலகின் மிகக் கொடூரமான முறைகளை எல்லாம் தனது படைகளுக்கு பயிற்றுவித்து செயற்படுத்திப் பார்க்கும் அரசியல் தலைமைத்துவங்கள், தொடர்ந்தும் இலங்கைத் தீவை ஆட்சி செய்கின்றன. இதற்கென வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் பயிற்சியளித்துள்ளனர். இதனை சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவரே வெளிப்படையாக ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார். சிறிலங்கா இராணுவத்தில் விசேட குழுக்களின் உறுப்பினர்கள் என இனங்காணப்பட்ட 300 - 400 வரையான ஆட்களுக்கு கட்டுப்பாடின்றிக் கொலை செய்வதற்காக பயிற்சி அளிக்கப்பட்டதாக சண்டே லீடருக்கு வழங்கிய தகவலில் தெரிவித்திருக்கின்றார்.

பொதுப்படையாகவே சிறிலங்காப் படையினர் எத்தகைய மனோபாவத்துடன் தயார்ப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு விசேட பயற்சியை அளிக்க வந்த பிரித்ததானிய எஸ். ஏ.எஸ். படைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியே எடுத்துரைத்துள்ளார். அவர்களுக்கு நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை. தமிழரை கொன்றழிப்பதைத் தவிர வேறு எந்த சிந்தனையும் இல்லை. நாங்கள் பயிற்சியளித்தவர்களில் சிலர் மிகக் கொடூரம் புரிந்தவர்கள் என Immediate Action என்ற தனது நூலில் விபரித்திருக்கின்றார்.

1987 பெப்ரவரி 30இல் கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற படுகொலையும் அதற்கென அளிக்கப்பட்ட ஒரு பயிற்சியின் அடிப்படையில் செய்யப்பட்டதே. பிரிட்டனின் கீனிமீனி (K.M.S) பயிற்சி படைகளுக்கு அளிக்கப்பட்டதாகவும் அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக - பெற்ற பயிற்சியினை படையினர் சரியாகச் செய்கின்றார்களா என்று அறிவதற்காக இப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதாகவும் பயிற்சியளித்தவர்களே தெரிவித்திருக்கின்றா[illegible] தமிழ் மக்களையும் தமது பிரஜைகளே என வெளியுலகுக்கு கூறிக் கொள்ளும், தன்னை ஒரு ஜனநாயக அரசாகக் காட்டிக்கொள்ளும் சிறிலங்கா தமிழினத்தை அழிப்பதற்காக எவ்வாறு தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது என்பதற்கு இவை சிறு எடுத்துக்காட்டுக்களே.

சிறிலங்கா அரசினதும் படைத்துறையினதும் இருப்பும் வளர்ச்சியும் தமிழினப் படுகொலைகளையே நோக்கமாகக் கொண்டவை. இவையின்றி அவற்றால் தம்மைத் தக்கவைத்துக் கொள்ள இயலாது என்பதுதான் யதார்த்தமானது. கடந்த மூன்றரை வருடங்களாக நிலவும் சமாதானத்துக்கான சூழலிலும் இது புலப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்

(8 ஆம் பக்கம் பார்க்க)




**25.07.2005**
**31.07.2005**

## 25

□ சிறிலங்கா அரசின் மிலேச்சத்தனமான நடவடிக்கையினை எதிர்த்தும், தமிழீழத்தில் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்தை சர்வதேசத்திடம் கோரியும், பொறுத்தது போதும், போரைத் தொடங்குமாறு தேசியத் தலைவரிடம் கோரியும் முல்லைத்தீவில் மக்கள் பேரணியொன்று நடாத்தப்பட்டது.



□ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பிற்கெதிராக ஜே.வி.பி யினால் எதிர்ப்புப்போராட்டமொன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.



## 26

□சிங்கள தேசம் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து எமது மக்கள் மீது திணித்திருக்கின்ற இராணுவ ஆக்கிரமிப்பு நெருக்குவாரங்கள் அனைத்தையும் நிறுத்தி தமிழர் தேசத்தையும், தமிழ் மக்களையும் நிம்மதியாக வாழ அனுமதித்தால் மட்டுமே சிங்கள தேசம் நிம்மதியான வாழ்வைப்பெறமுடியும். அதைவிடுத்து தமிழ் மக்கள் மீது வன்முறையை, ஆக்கிரமிப்பைத்திணித்து வாழ்வைச் சிதைக்க முற்படுவார்களேயானால் தமிழ் மக்கள் ஒன்று பட்டு மீண்டெழுந்து ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழீழ சட்டவாக்கச் செயலக திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு தெரிவிப்பு.



## 27


□எமது தாயக நிலத்தையும், கடலையும் ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவம் உடன் வெளியேற வேண்டும். எமது சுதந்திரவாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணிதிரண்ட படியே உள்ளோம். சர்வதேச சமூகம் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென வவுனியாவில் நடந்த தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் அனைத்து மாவட்ட பேராளர்களினால் பிரகடனம் வெளியிடப்பட்டது.



□ வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டைக் குழப்பும் வகையில் விஷமிகளினால் கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

## 28

□ வவுனியாவில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப் பட்ட பிரகடன அறிக்கையினை தமிழீழத் தேசியத் தலைவர்அவர்களுக்கு கையளிக்கும் வகையில் கிளிநொச்சி அரசியல்துறை நடுவப்பணியகத்தில் வைத்து தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களிடம் திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் கையளித்தார்.



□ வவுனியா திருநாவற்குளம் பகுதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகசேவை காரியாலயத்தின் மீது இனந் தெரியாதவர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

□ஈ.பி.டி.பி தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் யாழ்.நகரில் வைத்து சுட்டுக்கொலை.



□சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளைத் திட்டமிட்டு இழுத்தடிப்பதை கண்டித்தும் தமிழீழ தேசியத்தலைவரின் கரததை வலுப்படுத்தும் வகையிலுமான மக்கள் பேரணியொன்று பூநகரியில் நடத்தப்பட்டது.




## 29

□ஆழிப்பேரலை நிவாரணசபை உடன்படிக்கையின் சில விடயங்களை அமுல்படுத்துவதற்கு உயர் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடை யுத்தரவை நீக்குமாறு கோரி நிவாரண, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளரினால் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

□யாழ்.அச்சுவேலிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

□அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த ஆறு பேரைக்கொண்ட உயர்மட்டக்குழு வொன்று காரைநகர், காங்கேசன்துறை கடற் படைத் தளங்களுக்கு விஜயம் செய்ததோடு அங்கு சிறிலங்கா கடற்படை அதிகாரிகளுடன் இரகசிய ஆலோசனையும் நடத்தியது.

□அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் போக்குவரத்திற்கான பயணபாதுகாப்பு மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் என்பன குறித்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர், நோர்வே அனுசரணையாளர்களுடன் ஒஸ்லோவில் முக்கிய பேச்சுக்களை நடத்தினார்.

## 30

□திருகோணமலையில் இந்திய ஒயில் நிறுவனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையத்துடனான பிரதேசத்தைப் புகைப்படம் பிடித்தார்கள் என்ற குற்றச் சாட்டின் கீழ் மூன்று இளைஞர்கள் கைது.

□தமிழீழ சுகாதார சேவையானது இந்த தேசத்தினுடைய நலமேம்பாடு தொடர்பான விடயத்திலே மிகுந்த கரிசனைகாட்டிவருகின்றது. அதில் உளநலம் என்பது மிக முக்கியமானது. இவ்வாறு உளவியல் ஒருங்கிணைப்புக்குழு அமைப்பதற்கான ஒன்றுகூடலில் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவிப்பு.



# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம்

# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

கிளிநொச்சி மற்றும் முல்லைத தீவு மாவட்டங்களிலிருந்து தமிழ் மொழிமூல பட்டதாரி ஆசிரியர் மற்றும் ஏனைய பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் பட்டுள்ளோரின் பெயர் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவர்களுக்கான நேர் முகப் பரீட்சை நாளையும், நாளை மறுதி[illegible]மும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறும்.

கே.ஏ.கணேஸ்வரன் உடையார் கட்டு தெற்கு, ஜே.ஜெயச்செல்வி அம்பலவன் பொக்கணை. ஏ,கலைவாணி- உருத்திரபுரம். எஸ்.பீதாம்பரம் கோம்பாவில்- புதுக்குடியிருப்பு. கே.உதயகாந்தன்-வில்சன் றோட், கிளிநொச்சி. எஸ்.மேரிகிறிஸ்ரபெல்- உடையார்கட்டுதெற்கு. எஸ்.பொன்விழி-விஸ்வமடு. ரி.திவாகரன்- ஸ்கந்தபுரம். அருட்திரு எம்.ஏ.அமலதாஸ்-ஆரோபணம் ஆண்கள் விடுதி, கிளிநொச்சி. எஸ்.ஈ. நேசரெட்ணம், கள்ளப்பாடு நலன்புரி நிலையம், உண்ணாப்பிலவு முல்லைத்தீவு. எஸ்.றமியாதேவி எம்.எம்.பி கட்டடம் பிரதானவீதி, கிளிநொச்சி. எம்.சசீந்திரசிங்கம் வற்றாப்பளை. எஸ்.சுகந்தன் உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. கே.யோகநாதன்-பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி எஸ்.அகிலேஸ்வரன்-பிரமந்தனாறு தருமபுரம். ஐ.அன்ரன் நேசநாயகம்- அளம்பில் முல்லைத் தீவு. ஆர்.அரவிந்தன்- மட்டுவில்நாடு, பூநகரி. எம்.அருளமொழி மத்தியகல்லூரி, கிளிநொச்சி. பி.பகீரதி- உதய நகர் கிழக்கு, கிளிநொச்சி. [illegible]ஸ்கரன்-சிவநகர் புதுக்குடி [illegible] ஐ.சித்திரா-ஒலுமடு, தமிழ்வித் தியால[illegible] மாங்குளம். ஏ.ஜே.தேவாணந்- செ[illegible] மேரீஸ்றோட், முல்லைத் தீவு. எஸ்.இளந்திரையன்- குமரபுரம், பரந்தன். கே.ஞானேந்திரன்- கரைச்சிக் குடியிருப்பு முல்லைத்தீவு. எஸ்.ஜசோதமலர்- கணேசபுரம் கிளிநொச்சி. எஸ்.ஜீவகன்-கண்டாவளை மகாவித்தியாலயம் கண்டாவளை. ஏ.ஜீவராசா- புதுக்குடியிருப்பு. ரி.ஜெகரஞ்சினி- 2ஆம் வட்டாரம் முள்ளியவளை. எஸ்.ஜெகறூபன்-ஸ்கந்தபுரம். எஸ்.ஜெகதீஸ் -விவேகானந்தநகர் கிளிநொச்சி. ரி.ஜெகதீஸ்வரன்- மாமூலை-முள்ளியவளை. வி.ஜெயக்குமார்-சிவநகர் புதுக்குடியிருப்பு. வி.ஜெயநாதன்-கரும்புள்ளியான் நட்டாங்கண்டல் மாங்குளம். ஜே.ஜெயநேசன்- முத்துஐயன்கட்டு. பி.ஜெயந்தன்-உடையார்கட்டு வடக்கு.ரி.ஜெயந்தினி 4ஆவது மைல் கல்-பூநகரி. எஸ்.ஜெயரஞ்சன்-நட்டாங்கண்டல. ஆர் ஜெயசுதா-உதய நகர் கிழக்கு கிளிநொச்சி. ஆர்.ஜெயசுதன்-புதுக்குடியிருப்பு. கே.ஜே.ஜெயதாஸ்-புதுக்குடியிருப்பு. ஏ.ஜெயவாணி- வட்டுவாகல் முல்லைத்தீவு. ரி.கலைவாணி-3ஆம் வட்டாரம் முள்ளியவளை. சி.கமலாதேவி-10ஆவது மைல்கல்-விசுவமடு, ஆர்.சுதாஸ்கரன்- ஊற்றங்கரைவீதி தண்ணீரூற்று. ரி.அன்பரசி-சிவபுரம் வவுனிக்குளம். வி.பாலமதி-பாலிநகர் வவுனிக்குளம். எஸ்.ஈழமதி - முரசுமோட்டை பரந்தன். அருட்சகோதரி எஸ். கிறேஸ்மேரி- திருக்குடும்ப கன்னியர் மடம் இரணைமாதாநகர் பூநகரி, ஆர்.ஜீவாஜினி- நாவலர்வீதி முள்ளியவளை. கே.ஜீவமலர்-கலைமகள் வித்தியாலயம்- முல்லைத்தீவு. வி.கலைச்செல்வி- புதியபுன்னை நீராவி, விசுவமடு. யு.கௌசலா-2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. ரி.மைதிலிசிறி-இராமநாதபுரம் கிளிநொச்சி. அருட்சகோதரி ஏ.மலர்விழி புனிதிரேசாள் ஆலயம் கிளிநொச்சி. எஸ்.நளினி-இல.593 ஸ்கந்தபுரம். ஆர்.பரமேஸ்வரன்-7ஆம் வட்டாரம் -புதுக்குடியிருப்பு. எம்.சிவநாதன்-கனகபுரம் கிளிநொச்சி, கே.சுபாஷினி-4ஆம் வட்டாரம் முள்ளியவளை. எஸ் சுகந்தினி-4ஆம் வட்டாரம் முள்ளியவளை. எஸ்.சுகந்தினி 2ஆம் வட்டாரம்-முள்ளியவளை. வி.பாஸ்கரன்-2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. ஜே.எம்.ஜெயந்தா உதயநகர் மேற்கு கிளிநொச்சி. ஜி.கார்த்திகேயன்-ஜெயந்திநகர் கிளிநொச்சி. என்.கவிதா-பாண்டியன் குளம்-மாங்குளம். ரி.நந்தனசபேசன்.7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. கே.நந்தினி -பாரதிவித்தியாலயம் பாரதிபுரம் கிளிநொச்சி. ரி.பாஸ்கரன்-4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. பி.பத்மநாபன்- இராமநாதபுரம் கிளிநொச்சி. ஆர்.சிறிகுமார்- கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி. ரி.விமலதாஸ்-உருத்திரபுரம். ஆர்.யோகேந்திரன்-பெரியபளை பளை, எஸ்.கௌரீசன்-வட்டக்கச்சி கிளிநொச்சி. ஜே.ஜெயச்சந்திரன்- கோணாவில் கிளிநொச்சி. கே.கவிதா- குமரபுரம் பரந்தன். எஸ்.சுகந்தினி- சுரேந்திரா ஸ்ரோர்ஸ். வற்றாப்பளை, வி.கேதீஸ்வரி-4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. ரி.மங்களேஸ்வரன்- கோம்பாவில் புதுக்குடியிருப்பு. ஆர் றஜிதா-இரத்தினபுரம் கிளிநொச்சி, எம்.சாந்தலதா-வத்திராயன்வடக்கு தாளையடி. ஆர்.சுஜாதா-கௌரிஅகம் தண்ணீரூற்று. ரி.யாழினி-4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. எஸ்.பேரின்பவதனி-உடையார்கட்டு. எஸ்.அருள்மதி-தண்ணீரூற்று. கே.ஜெகதீஸ்வரன்- கண்டாவளை.ஜி.கவிதா-106 சிவிச் சென்ரர் உருத்திரபுரம். எஸ்.றதீஸ்குமார்-செம்மலை. யு.சிவனந்தினி, பேரவை பளை. கே.சுஜிவதா-4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. எஸ்.பிரசாந்தன்- ஸ்கந்தபுரம் கிளிநொச்சி. எஸ்.சண்முகம் 100, சிவிக்சென்ரர் உருத்திரபுரம்.பி.உமாமகேஸ்வரி-இரத்தினபுரம் கிளிநொச்சி. என்விஜ யராஜா-167 D 10 உருத்திரபுரம். ஏ.ஜனார்த்தனி-609/6 இராமநாதபுரம் பரந்தன். கே.ஜெயந்தி - முரசுமோட்டை. ஜி.கலைவாணி-24,தும்புறுவில் ஜெயபுரம் பல்வராயன் கட்டு. ரி.கமலாவதி- தண்ணீரூற்று முல்லைத்தீவு. இ.கிருஷ்ணறாணி-ஒட்டு சுட்டான் ம.வி. வீ.மஞ்சுளா-ஜெயபுரம் பல்வராயன் கட்டு, ஜி.மேரிஜக் குலின், உருத்திரபுரம், என். மோகனரூபி-அம்பலவன் பொக்கணை முல்லைத் தீவு. எஸ்.நிர்மலசோதி-4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. எஸ்.சந்தானலட்சுமி-4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு-எஸ்.சபாலிங்கம்- 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.ரி.சுபாஜினி-4ஆம் வட்டாரம் முள்ளியவளை. ஆர்.தேவ மலர்- முறிகண்டி. ரி.அம்பிகாவதி- கண்டாவளை, ஆர்.ஜீவப்பிரியா- கந்தசாமி கோவிலடி, கிளிநொச்சி. எஸ்.கலைஞானவதி-ஞானிமடம். பூநகரி. எஸ்.பிரதீபா-7ஆம் வட்டாரம் குமுளமுனை முள்ளியவளை. எஸ் பிரபாலினி-4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. எஸ்.ரேணுகா-தண்ணீரூற்று முல்லைத்தீவு. வி.சாந்தமரி யாய்- நீராவியடி முள்ளியவளை கே.செல்வரதி 214 கணேசபுரம் முத்துஐயன்கட்டு வலதுகரை ஒட்டுசுட்டான்.

## புலிகள்...

கிழக்கில் காஞ்சிரங்குடாவில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையும் மட்டக்களப்பு சந்தி வெளியிலும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலும் மக்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமையும் சிறிலங்கா படை பாரம்பரியத்தின் வெளிப்பாடே ஆகும். இவ்வாறே படைகள் நேரடியாக படுகொலைகளை நிகழ்த்த முடியாது போயிருக்கும் சூழ்நிலைகளில் தனது புலனாய்வாளர்கள் ஊடாக தமிழ் மக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக கிழக்கிலும் தென்னிலங்கையிலுமாக ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்.

முடிவுரை

தமிழ் மக்களது போராட்டம் உரிமைப் போராட்டமாகத் தான் ஆரம்ப காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காக சாத்வீகப் போராட்ட வடிவத்தையே பின்பற்றினார்கள். தமிழ் மக்களது உரிமைப் போராட்டம் இராணுவ பலத்தின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்கொள்ளப்பட்டது.

சாத்வீக போராட்டங்கள் இராணுவ ஒடுக்குமுறையாலும் இனப்படுகொலைகளாலும் சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டன. இந்த நிலையில் இராணுவ ஒடுக்குமுறைகளையும் இனப்படுகொலைகளையும் எதிர்கொள்ளவே இளைஞர்கள் ஆயுதம் தாங்கினார்கள். இதனால், தமிழ் மக்களது உரிமைப் போராட்டங்கள் தேசிய விடுதலைப் போராட்டமாக பரிணமிக்கலாயின.

இந்த நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதம் இனப்படு கொலைகளை தீவிரப்படுத்தலாயிற்று. மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தமிழர் தாயகத்தை விடுவிக்கவும் அவர்களது உயிர், உடமைகளைப் பாதுகாக்கவும் விரிவாக்கம் பெற்றபோது அதுவொரு மக்கள் போராட்டமாக விரிவடையலாயிற்று. இந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு அரசியல், இராணுவப் பரிமாணங்களில் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை, நிலைமை ஏற்பட்டது.

அதனால், விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை இராணுவமாகவும் அதேவேளையில் தமிழ்த் தேசியப் பாதுகாப்புப் படையாகவும் பல்வேறு தளங்களில் செயற்படலாயினர். இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காவிட்டால் இலங்கைத் தீவில் தமிழ் மக்களது வாழ்வும் இருப்பும் எத்தகைய அவலத்துக்குள்ளாகியிருக்கும் என்பதை சிங்களப் புத்திஜீவியான பிரபல சட்டத்தரணி சந்திரபால குமாரகே அவர்களது பின்வரும் கூற்று தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

“தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் பெற்றிருக்காதிருந்தால் மக்களுடைய அழிவை யாராலும் தடுத்திருக்க முடியாது. விடுதலைப் புலிகள் பலம் பொருந்திய அமைப்பாக உருவெடுத்திருக்கின்றமையாலேயே, தமிழ் மக்கள் இன்று ஓரளவு நிம்மதியாக வாழ்கின்றார்கள்'-

சட்டத்தரணி - ஊடகவியலாளர் சந்திரபால குமாரகே.

□□


### நினைவலைகள்

## 20 ஆம் ஆண்டு நினைவில்..... 9 ஆம் ஆண்டு நினைவில்...

பிறப்பு 12.05.1962 வீரச்சாவு 16.04.1985



பிறப்பு 29.10.1976 வீரச்சாவு 03.08.1996

**வீரவேங்கை அன்பு**
மூத்ததம்பி தனபாலசிங்கம்
மானிப்பாயில் எதிர்பாராத வெடி விபத்தில்

**கப்டன் அன்பானந்தன்**
சபாரத்தினம் செல்வநீதன்
யாழ்.நாச்சிமார் கோவிலடியில்
இராணுவ நேரடி மோதலில்

நி.மு.வெற்றிலைக்கேணி, முள்ளியவளை.
இன்று நடைபெறும் நினைவு நிகழ்விலும்
மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும்வேண்டப்படுகின்றார்கள்.

த.மு.
அரச கால்நடை வைத்திய அலுவலகம் முன்பாக,
155 ஆம் கட்டை,
ஏ–9 சாலை,
கிளிநொச்சி.

(6512) தகவல்:–குடும்பத்தினர்.

## புதிய உளவளத்துணையாளர்களை உள்வாங்குதல்

அன்னை இல்லம் தமது உளவளத்துணைச் செயற்பாடுகளை மேலும் துரிதமாக்கும் வகையில் புதிய உளவளத் துணையாளர்களை இணைத்துக் கொள்ளவுள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**கவனத்திற்கு**

- வயதெல்லை 23–28 வரை இருத்தல்வேண்டும்.
- வன்னி பெருநிலப்பரப்பு மற்றும் வடமராட்சிக் கிழக்குப் பகுதிகளை நிரந்தர முகவரியாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சுனாமி அனர்த்தப் பகுதிகளில் பணிசெய்யும் ஆர்வமுடையவராக இருப்பதுடன் சமூகத் தொண்டுகளில் ஆர்வமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த. (உ /த) இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் தொடர்புகளுக்கு:-

அன்னை இல்லம்,
உளவளத்துணை, உளவியல் அறிவூட்டும் நிறுவனம்,
87,கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 10.08.2005

(6514)

## 31 ஆம் நாள் நினைவில்...

பிறப்பு 05.04.1981 வீரச்சாவு 04.07.2005



**வீரவேங்கை பைந்தமிழ்**
**துணைப்படைவீரர்**
சங்கரப்பிள்ளை சுகுனேஸ் (சுமன்)
கரவெட்டி-யாழ்.

தாயைவிட தாய்மண்ணை நேசித்து
தானைத் தலைவன் சேனைதனில்
புலியாகிப் போராடி களம் தனிலே
புயலென புரியவைத்த பைந்தமிழே
நீ மறைந்து மாதம் ஒன்று ஆனாலும்
மறையாத உன் நினைவுடன்

03.08.2005 (இன்று) 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் நினைவு நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

யோகபுரம் மல்லாவி. (6392) தகவல்-குடும்பத்தினர்

## பணிநிலை வேண்டுகை

### பாண்டியன் வாணிபத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உள்ளன

- கணக்குப்பதிவாளர், காசாளர், களஞ்சியக்காப்பாளர், உணவு பரிமாறுநர்.
- அகவை:- பொதுவானவை -18-45 வரை.
- கணக்குப்பதிவாளர்:- ஆண், பெண் இருபாலாரும்.
- களஞ்சியக்காப்பாளர், காசாளர், உணவுபரிமாறுநர் :- ஆண்கள் மட்டும்.
- தகைமை:-
  - 01) கணக்குப்பதிவாளர் :- உயர்தரத்தில் வர்த்தகம் பயின்றிருத்தல் வேண்டும்.
  - 02) காசாளர், களஞ்சியக்காப்பாளர் :- சாதாரண தரத்தில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  - 03) உணவு பரிமாறுநர்:- முன் அனுபவம் உள்ளவர்களுக்கும், சிங்களம்,ஆங்கிலம் உரையாடத் தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் (உணவு ,தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்)
- மேல் உள்ள பணிநிலையில் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, விசுவமடு பிரதேசங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- சம்பளம்:- நிதித்துறை சம்பளத்திட்டத்திற்கமைய.
- நேர்முகத் தேர்வு:-
  - 01) நாள் :- 05.08.2005 வெள்ளிக்கிழமை
  - 02) நேரம்:- காலை 10.00 மணி
  - 03) இடம்:- பாண்டியன் வாணிபம் நடுவப்பணிமனை வள்ளுவர்புரம் சந்தி (றெட்பானா சந்தி) விசுவமடு.
- நேர்முகத் தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
- கல்விச்சான்று, குடும்பப்பதிவு அட்டை, அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

ஆளுகை,
பாண்டியன்வாணிபம்,
நடுவப்பணிமனை.

(சி.12461)

## ஆறு புதிய சமரச திட்டங்களை இந்தியா பாகிஸ்தானிடம் சமர்ப்பித்துள்ளது

நேசநாடு அந்தஸ்து உட்பட ஆறு புதிய சமரச திட்டத்தை பாகிஸ்தானிடம் இந்தியா தெரிவித்துள்ளது.

வாகா எல்லையை நிரந்தரமாகத் திறந்து வைப்பது, இந்தியாவுக்கு நேசநாடு அந்தஸ்து அளிப்பது, ஆப்கானிஸ்தான், மத்திய ஆசிய நாடுகளுக்கு இந்திய பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பது, தனியார் விமானங்கள் பாகிஸ்தான் வான்பரப்பு வழியாகப் பறக்க அனுமதிப்பது, இந்திய வங்கிக்கிளைகளை பாகிஸ்தா னில் திறக்க அனுமதிப்பது, துறைமுக சட்ட விதிகளில் திருத்தம் செய்வது ஆகிய ஆறு யோசனைகளைப்பாகிஸ்தானிடம் இந்தியா தெரிவித்துள்ளது. வரும் ஒன்பது ,பத்தாம் திகதிகளில் இந்தியா-பாகிஸ்தான் அமைதிப் பேச்சுவார்த்தை டில்லியில் நடக்கிறது. இந்தக் கூட்டத்தில் ஆறு புதிய யோசனைகள் குறித்தும், ஏற்கனவே தெரிவித்த 24 யோசனைகள் குறித்தும் விவாதிக்கப்பட இருக்கிறது.

இதனிடையே பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். அப்போது மும்பை கனமழைக்கு தொளாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியானது குறித்து தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

இதற்கிடையில் இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி கடந்த சனிக்கிழமை நிருபர்களிடம் கூறுகையில், காஷ்மீர் பிச்சினையில் இந்தியா-பாகிஸ்தான் அமைதி பேச்சுவார்த்தை தடைப்படாது என்றும் தெரிவித்தார்.

---

International Federation
Of Red Cross and Red Crescent Societies

AUSTRIAN RED CROSS

Croix-Rouge suisse
Schweizerisches Rotes Kreuz
Croce Rossa Svizzera

Sri Lanka Delegation

SRI LANKA RED CROSS SOCIETY

### The International Federation of Red Cross and Red Crescent Societies Sri Lanka Delegation In Cooperation with the Austrian & Swiss Red Cross Consortium and the Sri Lanka Red Cross Society Kilinochchi Branch

Seeks to fill the following positions for its long-term housing reconstruction and community rehabilitation and development projects:

**FIELD OFFICER:**

**Qualifications:**
- GCE (A/L) Examination
- Fluent written and spoken English
- Computer Skills
- Mature personality who takes initiative and works independently
- Experience working with International Organizations
- Experience working with authorities and/or communities

**Responsibilities:**
- Assist the Austrian/Swiss Red Cross Delegate in the overall coordination and execution of the project
- Liaison with authorities and communities
- Supervision of community surveys
- Preparation of reports

**ADMINISTRATIVE and ACCOUNTING OFFICER:**

**Qualifications:**
- GCE (A/L) Examination
- Fluent written and spoken English
- Well versed in using MS Office
- Mature personality who takes initiative and works independently
- Previous work experience in administration and accounting

**Responsibilities:**
- Assist the Austrian/Swiss Red Cross Delegate in all administrative work related to the project
- In charge of all clerical and accounting work at the office

**DRIVER**

**Qualifications:**
- Fluent English
- Experience driving 4WD
- Mature personality who takes initiative
- Experience working with International Organizations

**Responsibilities:**
- Responsible for vehicle condition and equipment
- In charge of administrative work for the vehicle
- Occasional trips outside the Vanni, including Colombo
- Assisting the field officer in procurement

We offer long-term contracts and competitive salaries according to International NGO standards.
All jobs are based in Kilinochchi and successful candidates will be reporting directly to the Austrian/Swiss Red Cross Delegate there.
Please address your comprehensive applications (including CV with employment history), indicating for which position you apply, to Chairman/Secretary, Sri Lanka Red Cross Society, Kannan Temple Road, Kilinochchi.
Deadline for applications is 08 August 2005.

*(சி-12396)*

---

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பு அலகிற்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கான பதவி வெற்றிடங்கள் (தற்காலிகமானது)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பிற்கான அலகிற்கான மாவட்ட முகாமையாளர் அலுவலகத்திற்குக் கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களினை நிரப்புவதற்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| கோரப்படும் பதவிகள் | தேவைப்படும் ஆளணி |
|---|---|
| 01. தொழில்நுட்ப உதவியாளர் | 01 |
| 02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் | |
| (01) முதுநிலை | 01 |
| (02) இளநிலை | 01 |
| 03. திட்ட உதவியாளர் | 01 |
| 04. தரவு நிரல்படுத்தும் உத்தியோகத்தர் | 01 |

மேற்படி பதவிகளுக்குக் கீழ்வரும் தகைமைகளுடைய விண்ணப்பதாரிகள் 20.08.2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு விண்ணப்பிப்பதுடன், கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் " சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள்கட்டமைப்பிற்கான அலகு.......................................... பதவி வெற்றிடம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சொந்த இடமாகக் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### மேற்படி பதவிகளுக்கு எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

**(01) தொழில்நுட்ப உதவியாளர்**

- * தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T) பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**(02) தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

(01) **முதுநிலை உத்தியோகத்தர்.**

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T) அல்லது மத்தியதர தொழில்நுட்ப சேவையில் (M.L.T) தரம் 1 இல் உடையவராகவும்.

- * அத்துடன் கூடிய சேவை அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(11 **இளநிலை உத்தியோகத்தர்.**

- * க.பொ.த (சா.த)இல் கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறுபாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் அத்துடன்
- * கட்டட நிர்மாணத்துறையில் 10 வருட தொழில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**(03) திட்ட உதவியாளர்**

- * புவியியல் அல்லது சமூகவியல் பாடங்களைக் கற்று பட்டதாரியாக இருத்தல் வேண்டும். சமூகவியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(04) * க.பொ.த.(சா.த) இல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் கணனித்துறையில் கூடிய தகைமைகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(சி.12473)

**திருமதி. இமெல்டா சுகுமார்,**
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

# விளையாட்டால் கல்வி பாதிக்கப்பட்டுவிடும் இந்த நிலை மாறவேண்டும் நம்மிடம்



பாப்பா

விளையாடுவதால் கல்வி பாதிக்கப்பட்டுவிடும் என்ற நிலை மாணவர்கள், பெற்றோர் மத்தியில் மாறவேண்டும் அப்போது தான் விளையாட்டில் பாரிய மாற்றம் ஏற்படும் என தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

விளையாட்டால் கல்வி பின்நோக்கிச் சென்றுவிடும் என்ற அறியாமையை உடைத்தெறியவேண்டும். இதனை அனைவரும் சமூகத்தில் விதைக்கவேண்டும்.

ஏனெனில் ஆரோக்கியமான, திடகாத்திரமான இளைஞனால் தான் கல்வியிலும் சாதிக்கமுடியும். இந்த உண்மையை அனைவரும் உணரவேண்டும்.

விளையாட்டை ஒரு அறிவியலாக எடுக்கும்போது சமூகத்தில் ஒரு திடகாத்திரமான சமூகத்தை உருவாக்குவதுடன் தீய பழக்கவழக்கங்களுக்குஆளாகாமல் தடுக்கவும் முடிகிறது. எனவே இளைஞர்களை மைதானங்களுக்கு கொண்டுவருவதால் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

இன்று உலகத்தை ஆட்டிப்படைத்துக்கொண்டிருப்பது விளையாட்டு ஒன்று மாத்திரமே. எங்களுடைய பிரதேசத்தில் இது சிலவேளை விதி விலக்காக இருக்கலாம் இது அறியாமை என்றுதான் கூறவேண்டும்.

இன்று யுத்தம் செய்து விடுதலை பெற்றுள்ள நாடுகள் எல்லாம் விளையாட்டையே போராக எடுத்துக்கொண்டு தலை நிமிர்ந்து நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆகவே அந்த நிலை தமிழீழத்திலும் உருவாகும் காலம் வெகுதொலைவில் இல்லை என்றார்.

# வெற்றி தோல்வி முக்கியமல்ல பண்புகளை வளர்ப்பது விளையாட்டு

**மேலதிக அரச அதிபர் வேதநாயகன்**



விளையாட்டு என்பது பண்புகளை வளர்க்கின்ற ஒரு முக்கியமான துறையாகும் என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட 21ஆவது மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொண்டு முதன்மை உரை நிகழ்த்தும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; விளையாட்டில் வெற்றி தோல்வி என்பது முக்கியமல்ல. அதைமதித்து வெற்றியையும்,தோல்வியையும் சமமாக மதிக்கின்றதோடு வெற்றி பெற்றவர்களை மதிக்கின்ற தன்மையும் தோல்வி பெற்றவர்களை மதிக்கின்றதன்மையும் ஏற்பட வேண்டும்.எந்தப் போட்டியிலும் அதனுடைய ஒழுங்கு விதிகளைக்கடைப்பிடித்து அதனை சிறப்பாகப் பின்பற்றுவது தான் விளையாட்டுத்துறையின் முக்கியமானதொருபண்பு வெற்றியை விட சிறந்த ஒரு பண்பை விளையாட்டுத் துறை வளர்க்கின்றது.

ஆகவே இன்று விளையாட்டுத்துறையிலே முன்னேறியவர்கள் இந்தப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்று சர்வதேச ரீதியிலும் சரி, உள்நாடுகளிலும் சரி பண்புகள் குறைந்து செல்கின்றதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.இதற்குப் பல கட்டுப்பாடுகளை காலத்துக்கு காலம் சர்வதேச ரீதியிலும் சேர்த்துக்கொண்டு வருகின்றார்கள் என்றார்.

# இலுப்பைக்கடவை அ.த.க.பா. மாணவி சிவசுப்ரமணியம் ஜானுகா சாதனை



மன்னார் இலுப்பைக் கடவை அ.த.க. பாடசாலையின் வரலாற்றில் முதன் முறையாக மாகாண மட்ட மெய்வல்லுநர் திறனாய்வில் 15 வயதுக்கு கீழ்ப்பிரிவில் ஜானுகா குண்டுதள்ளுதல், தட்டெறிதல் நிகழ்வுகளில் முதலாம், மூன்றாம் இடங்களைப்பெற்று அகில இலங்கை ரீதியான போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.




# கே. சி. சி. சி. வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டி பற்றீசியன்ஸ், ஜொனியன்ஸ் அணிகள் இறுதிப்போட்டியில்

கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக்கழக கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட ரீதியில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு பற்றீசியன்ஸ், ஜொனியன்ஸ் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று அரையிறுதியாட்டத்தில் காலை 8.30 மணிக்கு யாழ். பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றது. பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி சகல இலக்குகளையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சர்வானந் 84 ஓட்டங்களும், கௌரிபாகன் 19 ஓட்டங்களும், ரஜீவன் 10 ஓட்டங்களும், அருள்ராஜ் எட்டு ஓட்டங்களும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் பார்த்தீபன் இரண்டு இலக்குகளையும், ஜீனஸ் மூன்று இலக்குகளையும் வினோதன், இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

151 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பற்றீசியன்ஸ் 25.4 ஓவரில் ஐந்து இலக்குகள்ளை இழந்து வெற்றி இலக்கைப் பெற்றது. இதில் பார்த்தீபன் 58 ஓட்டங்களும், முகுந்தன், சேர்சில் முறையே 35,20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் அருள்ராஜ், ஜனத்தன் தலா இரண்டு இலக்குகளை கைப்பற்றினர்.

மாலை 1.30 மணிக்கு நடைபெற்ற மற்றைய அரையிறுதியாட்டத்தில் சுன்னாகம் யங்கிஸ்ரார் அணியை எதிர்த்து யாழ். ஜொனியன்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யங்கிஸ்ரார் அணி 28.4 ஓவரில் தனது சகல இலக்குகளையும் இழந்து 199 ஓட்டங்களைப்பெற்றது. இதில் சுஜீவன், துஷ்யந்தன்,சரிவர்ணன், சுதாகர் ஆகியோர் முறையே 63, 29,22,20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லவேந்திரா, குமணன் ஆகியோர் தலா மூன்று இலக்குகளையும், மதன்ராஜ் இரண்டு இலக்குகளையும், கைப்பற்றினர். 200 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி 29.1 ஓவர் நிறைவில் எட்டு இலக்குளை இழந்து 201, ஓட்டங்களைப் பெற்றுவெற்றிபெற்றது. இதில் பார்த்தீபன், மதன்ராஜ் ஆகியோர் ஆட்ட மிழக்காமல் முறையே 53,37 ஓட்டங்களையும், அன்புஜன் 43 ஓட்டங்களும், நேசவர்மன் 16 ஓட்டங்களும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ரஜித், சுதாகர், கிருஷ்ணசந்திரா ஆகியோர் முறையே மூன்று, இரண்டு, ஒன்று இலக்குகளையும் கைப்பற்றினர். இந்த சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (கீ)

# மாகாண மட்ட கால்பந்துப் போட்டி மன்னார் மகளிர் அணி சம்பியன்

வடக்கு- கிழக்கு மாகாண மட்ட பெண்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணியை தோற்கடித்ததன் மூலம் மன்னார் மாவட்ட அணி அகில இலங்கை ரீதியான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

கடந்த ஞாயிறன்று வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட மகளிர் அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதியது. போட்டி ஆரம்பம் முதலே இரு அணி வீரங்கனைகளும் மிகவும் விறுவிறுப்பாக மோதிய போதும் ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் மன்னார் மாவட்ட அணி ஒரு கோலைப் போட்டதும் ஆட்டம் மேலும் விறுவிறுப்படையத் தொடங்கியது. முதல் பாதி ஆட்டம் 1.0 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது. இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியதும் யாழ். வீராங்கனைகள் கோல் போடுவதற்கு முயற்சித்தபோதும் பலன் கிடைக்காத நிலையில் ஆட்ட நேர முடிவில் 1-0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட அணி சம்பியனானது.

# 56ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மின்னொளியிலான கரப்பந்துப் போட்டி

அரியாலை சனசமூக நிலையத்தின் 56ஆவது விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை அரியாலை மத்திய சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் நடத்தி வருகின்றது. இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன.

கடந்த ஞாயிறன்று இரவு 8.00 மணிக்கு நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் மத்திய விளையாட்டுக்கழகம் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை 3-2 என்ற சுற்றுக்களில் (25-21, 22-25, 25-23, 21-25, 15-11 என்ற புள்ளி அடிப்படையில்) வெற்றிபெற்றது.

இதேவேளை, நடைபெற்ற மற்றைய அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை 3-0 என்ற நேர் செற்றுக்களில் (25-21, 25-19, 25-20 என்ற புள்ளி அடிப்படையில்) வெற்றி பெற்றதன் மூலம் இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.



ஒட்டுசுட்டான் பிரதேச மட்டத்தில் முன்பள்ளி பாடசாலை சிறார்களுக்கான விளையாட்டு விழா கடந்த 30 ஆம்திகதி மாலை 3.00 மணியளவில் கற்சிலைமடு அ. த. க. பாடசாலையில் நடைபெற்றது. (05)

# ஆசிய பதினொருபேர் அணிக்கு இன்சமாம் உல்ஹக் தலைவர்



இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள ஆசிய பதினொருபேர் அணிக்கும் ஆபிரிக்க அணிக்குமிடையில் நடைபெறும் ஒரு நாள் போட்டிகளுக்கு ஆசிய அணிக்கு பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது தனக்கும், தனது நாட்டுக்கும் பாரிய மகிழ்ச்சியளிப்பதாக இன்சமாம் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்கஅணிக்கு ஷேன்பொலக் தலைமை தாங்குவர், இன்சமாம் 17,19,21 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள போட்டிக்கும் போட்டியின் முதலாவது இரு போட்டிகளுக்கும் பொலக்கும், இறுதிப் போட்டிக்கு கிறேம்ஸ்மித்தும் தலைமை தாங்குவர்.

இந்தப் போட்டி நடத்துவதன் நோக்கம் இரு கண்டங்களினதும் கிரிக்கெட் அணிகளை விருத்தி செய்ய நிதி சேகரிப் என தென்னாபிரிக்க கிரிக்கெட்சபைத் தலைவர் பீற்றர் [illegible] கா தெரிவித்துள்ளார். இதில் பத்துவீத நிதி உதவி [illegible] க்கு செலவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பந்துவீச்சில் மஹ்ரூப் அபாரம் சிறிலங்காவுக்கு 2 ஆவது வெற்றி



சிறிலங்காவில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் சிறிலங்கா அணி 50 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

தம்புள்ள ரிங்கிரி மைதானத்தில் இரவு பகலாக நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா முதலில் துடுப்பாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சங்கக்கார 79 ஓட்டங்களையும், அத்தப்பத்து 70 ஓட்டங்களையும், ஆனல்ட் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டினோறின் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய மேற்கிந்தியத்தீவு வேகப்பந்து வீச்சாளர்களுக்கு முகம்கொடுக்க முடியாது ஆரம்ப விக்கெட்டுக்களை சொற்ப ஓட்டங்களுக்கும் இழந்தபோதும் பின்வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இறுதியில் 45.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் சிமித் 68 ஓட்டங்களையும், ராம்டீன் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

மஹ்ரூப் பத்து ஓவர் பந்து வீசி ஐந்து ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக ஒன்பது ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவரைவிட பெர்னாண்டோ, முரளிதரன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஆட்ட நாயகனாக மஹ்ரூப் தெரிவானார். இன்று இந்திய அணியை எதிர்கொள்கிறது சிறிலங்கா.

## சிந்தனைக்கு



மலைபோல் மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை, எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# மீண்டும் கூட்டணி?

சனாதிபதித்தேர்தலுக்கான தனது வேட்பாளரை அறிவித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஆதரவு தேடும் படலத்தை ஆரம்பித்துள்ளது. இதில் அவர்களுக்கு ஆதரவான சக்திகளுடன் மட்டுமல்ல, முரண்பாடு, வேறுபாடுகளைக் கொண்ட கட்சிகளுடனும் கூட பேச்சுவார்த்தைகள், சந்திப்புக்கள் என்பன இடம்பெறத் தொடங்கியுள்ளன.

இந்த வகையில், சனாதிபதித்தேர்தலில் ஜே.வி.பி யுடன் மீண்டும் கூட்டுச் சேருவது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு தரப்பினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிய வந்துள்ளது. பொதுத் தேர்தலில் ஜே.வி.பி–சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டுக்கு அத்திவாரமிட்டவர்களில் ஒருவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமான மங்கள சமரவீர முனைப்புடன் உள்ளதாகவும் அறிய வந்துள்ளது.

சிறிலங்கா அரசியல்வாதிகள், ஆட்சி அதிகாரத்திற்கு வரவும், அதனைத் தக்கவைக்கவும் பேயுடனும், பிசாசுடனும் கூட கூட்டுச் சேரத் தயங்காதவர்கள். ஆகையினால், ஜே.வி.பி யுடன் மீண்டும் ஒரு தேர்தல் கூட்டணிக்குவர சுதந்திரக்கட்சியினர் முற்படுவது ஒன்றும ஆச்சரியத்திற்குரியதல்ல. மேலும், இக்கூட்டு சுதந்திரக்கட்சிக்கு மட்டுமல்ல, ஜே.வி.பி க்கும் அவசியமானதாகவே இருக்கத்தக்கது.

ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேருதல் அன்றி ஆதரவைப் பெறுதல் என்பது பெரியதொரு விடயமல்ல. இருதரப்பும் தமது எதிர்கால அரசியல் வாழ்விற்கு இத்தகையதொரு அரசியல்கூட்டு அவசியமானது என்றே கருதுகின்றன. அதாவது, தனித்து நிற்பின் ஐ.தே.க வால் தோற்கடிக்கப்படுவதும் பின்னர் முறியடிக்கப்படுவதும் நிச்சயமாக நிகழத்தக்கது என்றே கருதுகின்றனர்.

ஆகையினால், இரு தரப்பினரும் கூட்டுச் சேர்வதன் மூலம் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என அவை அபிப்பிராயம் கொள்கின்றன. ஆனால், அவற்றிற்குள் உள்ள ஒரே முட்டுக்கட்டையாக உள்ள விவகாரமானது சுனாமி அனர்த்த உதவி நிதி முகாமைத்துவம் தொடர்பான பொதுக்கட்டமைப்பு விவகாரமே. அதாவது, பொதுக்கட்டமைப்பை அரசாங்கம் கைவிடுமானால், குறிப்பாக, சனாதிபதி வேட்பாளர் அமுல் செய்யப்போவதில்லை என அறிவிப்பாரேயானால், சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர ஜே.வி.பி. தயாராகவே உள்ளது.

இதேவேளை, ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைக் கைவிட்டு சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேரமாட்டாது எனவும் கூறிவிடுவதற்கில்லை. அதாவது, தன்னை இடதுசாரிக் கட்சி எனக் கூறிக்கொண்டு – ஒரு பேரினவாதக் கட்சியாக செயற்படும் ஜே.வி.பி க்கு இது ஒன்றும் பெரிய விவகாரமல்ல.

இதேவேளை, தற்பொழுது சுதந்திரக்கட்சியில் முன்னணிக்கு வந்துள்ள இருவரும் அதாவது, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவும் ஜே.வி.பி க்கு வேண்டியவர்களாகவே உள்ளனர். மகிந்த ராஜபக்ஷவுடன் ஆரம்பத்தில் ஜே.வி.பி. முரண்பட்ட போக்கைக் கொண்டதாக இருந்திருப்பினும் தற்போதைய நிலையில் இணக்கப்பாடானதொரு போக்கே இரு தரப்பிலும் காணப்படுகின்றது. இதேவேளை, அநுரா பண்டாரநாயக்க ஜே.வி.பி யுடன் இணக்கப் போக்குடன் செயற்பட வேண்டுமென ஆரம்பம் முதலே வலியுறுத்தி வருபவர் ஆவார்.


அது மட்டுமன்றி, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் கருத்தெதுவும் கூறாது நழுவிக் கொண்டார் என்பதே உண்மை நிலவரமாகும். இது தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குக்கூடப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகத் தமக்கு எதுவுமே தெரியாது எனவும் தெரிவித்திருந்தார்.

ஆகையனால், பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை ஓரம் தள்ளினால் இரு தரப்பிடையேயும் உடன்பாடு இலகுவாகவே ஏற்பட்டுவிடும். இதேவேளை ,ஏற்கனவே, நீதிமன்றத்தீர்ப்பினால் நலிவடைந்து போயுள்ள பொதுக்கட்டமைப்பை மகிந்த ராஜபக்ஷ தூக்கி எறிதல் என்பது சிரமமானதொன்றாக இருக்கமாட்டாது.

இது மாத்திரமல்ல, ஜே.வி.பி யும், வாய்ப்பேச்சளவில் சவால்களை விட்டுவரினும் தனித்துப் பொதுத்தேர்தல் ஒன்றையோ, சனாதிபதித்தேர்தல் ஒன்றையோ சந்திக்க விரும்பவில்லை. ஏனெனில், தற்போதைய நிலையைக்கூடத் தக்கவைக்க முடியாது என்பது அதற்கு நன்கே தெரியும். அதுமட்டுமன்றி ஒரு வருடமாயினும் ஆட்சி அதிகார சுகத்தை அனுபவித்தவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் நிரந்தரமாக அமர்வதற்கு விருப்பம் கொண்டவர்களாகவும் இல்லை.

இந்நிலையில், சுதந்திரக்கட்சியும் – ஜே.வி.பி யும் கூட்டுச் சேருதலில் ஒரு சில இடையூறுகளைத் தவிர வேறு தடைகள் எதுவும் இருப்பதாகக் கொள்வதற்கில்லை. இதில் முக்கியமாக ஜே.வி.பி யுடன் சனாதிபதி சந்திரிகா வெளிக்காட்டிவரும் பகையுணர்வாகும். ஆனால், தனது கணவரின் கொலையுடன் ஜே.வி.பி க்குத் தொடர்புண்டு எனத் தெரிந்திருந்தபோதும், தனது அதிகார அபிலாசைகளுக்காக ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேர்ந்தவர் சனாதிபதி சந்திரிகா. ஆகையினால் மீண்டும் ஜே.வி.பி யுடன் சுதந்திரக்கட்சி கூட்டென்பது ஏற்பட முடியாததொன்றல்ல.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகாவின் தீர்மானங்களே கூட்டா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கும். ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைப்பது மேலானதா? அன்றி ஐ.தே.க. கட்சியின் கீழ் இருப்பது மேலானதா? என்ற சந்திரிகா குமாரதுங்கவின் தீர்மானமே ஜே.வி.பி. – சுதந்திரக்கட்சி கூட்டணியைத் தீர்மானிப்பதாக இருக்கும்.




செய்தி– பஞ்சதர்மக் கொள்கையை ஏற்றால் மகிந்தராஜபக்ஷவிற்கு ஆதரவு –ஹெல உறுமய நிபந்தனை

# மேர்வின் சில்வாவின் கருத்துக்களை ஆட்சேபித்து மலையக மக்கள் முன்னணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

பிரதியமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பில் வெளியிட்டிருந்த கருத்துக்களைக் கண்டிக்கும் வகையில் மலையக மக்கள் முன்னணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. எதிர்வரும் எட்டாம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக இந்த எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பில் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் வெளியிட்ட கருத்துக்களை கண்டிக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டத்தை நடாத்துவதாகத் தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணி, பிரதியமைச்சர் மேர்வின் சில்வா மீது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஒழுக்காற்று நடவடிக்கையெடுக்க வேண்டுமென இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் வலியுறுத்தவுள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்தப் போராட்டத்தில் சிறிலங்கா அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் வர்த்தக சங்கங்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் ஊடக அமைப்புக்கள் ஆகியன கலந்துகொள்ளவுள்ளதாகவும் மலையக மக்கள் முன்னணி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் கண்டனம் வெளியிட்டிருக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளது. நேற்று அந்தக் கட்சி சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

(ஏழாம் பக்கத்தொடர்ச்சி)

ரி.சிந்துஸா புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, எஸ்.சுலோஜினி வள்ளிபுனம் புதுக்குடியிருப்பு, ஜி.விஜயா 6 ஆம் யுனிட் இராமநாதபுரம், ஆர். விஜிதா 5/1 திருவையாறு கிளிநொச்சி, எஸ் யசோதா தண்ணீரூற்று முள்ளியவளை, ஆர். ஜோதிலிங்கம் 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, கே.கேதீஸ்வரன் வட்டக்கச்சி, கே.றதிகலா 4 ஆம் வட்டாரம் முள்ளியவளை, ஆர். சந்திரலேகா 719 சிவிச் சென்ரர் வட்டக்கச்சி, கே. கிருஷ்ணவேணி 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ஆர். பிறேம்குமார், 233 திருநகர் கிளிநொச்சி, சதானந்தகுமரன் 115 உதயநகர் கிளிநொச்சி, கே.கவிதா 6 ஆம் வட்டாரம் குமுழமுனை முள்ளியவளை, ரி கவிதா சமளங்குளம் ஒட்டுசுட்டான், எம். கயல்விழி 143 உருத்திரபுரம் கிளிநொச்சி, வி.கிருஷ்னவேணி 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ஏ. கிஷ்னதாஸ் 45/1 விசுவமடு கிழக்கு முல்லைத்தீவு, ஏ. கோகிலவதனி 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ஆர் கிருஷ்ணகுமார் விசுவமடு ம.வி, எம். கிருஷ்ணகுமார் 3 ஆம் வட்டாரம் முள்ளியவளை, பி. குலேந்திரன் சிலாவத்தை முல்லைத்தீவு, ஜே. குமுதினி 73/1 திருவையாறு கிளிநொச்சி, கே.குமுதினி 164 ஸ்கந்தபுரம் கிளிநொச்சி, எஸ்.எம். குணநாயகி 4 ஆம் வட்டாரம் முள்ளியவளை, எஸ். லதாஜினி 169 உருத்திரபுரம் கிளிநொச்சி, எஸ்.லதீஸ்குமார் மட்டுவில் நாடு பூநகரி, ரி. லிங்கா 246/3 முல்லை ரோட் முரசுமோட்டை, ஏ.ஜே.ஆர். மக்னமாரா D8 உருத்திரபுரம், வி.மாலினி 7 ஆம் வட்டாரம் குமுழமுனை, கே. மனோறஞ்சன 1ஆம் வட்டாரம் முள்ளியவளை, எம் மேரிசசிகலா 8 ஆம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பு, ஜே. மேரிதிரேசா 10 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, வீ.மாதவன் திருவையாறு கிளிநொச்சி, எஸ். மோகனராஜா கணுக்கேணி முள்ளியவளை, ரி.முரரி பொதுச்சந்தை புதுக்குடியிருப்பு, எம். முத்துக்குமரன் மயிலிட்டி முகாம் ஜெயபுரம் தெற்கு பல்லவராயன்கட்டு, கே. நந்தினி 593 ஸ்கந்தபுரம் கிளிநொச்சி, எஸ்.நர்மதா ஒட்டுசுட்டான் ம.வி, எஸ் நவநீலன் 7 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பு, எஸ்.நிரஞ்சலா 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, எம்.பகீர்தன் முள்ளியவளை முல்லைத்தீவு, ஜி.பரணீதரண் 123/2 திருவையாறு கிளிநொச்சி, எஸ். பவித்ரா 112/1 விசுவமடு கிழக்கு முல்லைத்தீவு, பி. பிரமிளா விவேகானந்த நகர் கிளிநொச்சி, எஸ். பிரியதர்சினி 798 கட்சன் றோட் வட்டக்கச்சி, ஆர். பொன்ராஜி கூழாமுறிபபு அத.க.பா ஒட்டுசுட்டான், ரி.பிரபாகரன் கலவெட்டித்திடல் புளியம்பொக்கணை, ஜி.பிரசாந்தன் 205 ஸ்கந்தபுரம் கிளிநொச்சி, எஸ். பிரதீபன் உருத்திரபுரம், ஆர். ராஜசிவேந்திரன் 300 பாரதிநகர் யோகபுரம், என் றாஜி 739 யோகபுரம் மல்லாவி, என் றஞ்சனா பிரதிசுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் முல்லைத்தீவு, எஸ். றாதிகா 79/7 பிரமந்தனாறு பரந்தன், எஸ். ரவிகரன் 285 கரும்புள்ளியான் நட்டாங்கண்டல், ஜி. றயன குமார் 900 கட்சன் றோட் வட்டக்கச்சி, என். றோகினி 298 மூன்றாம் யுனிட் பாரதிநகர் யோகபுரம், ஐ.றுதர்சனா 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு,எம். காஞ்சனா- எழுமதி -ஸ்ரூடியோ முள்ளியவளை, எஸ்.கே. கருணாகரன்- நட்டாங்கண்டல்-மாங்குளம், எஸ்.ஜே. சேந்தினி- கல்மடுநகர் வீதி தருமபுரம், என். சிவறஞ்சினி ஆனந்தபுரம் கிளிநொச்சி, தேவகரன்- பெரியகுளம் கிழக்கு, கட்டைக்காடு, கே.உதயகாந்தன்- வில்சன் றோட்,கிளிநொச்சி, பி.வசந்தன், ஆறுமுகம் றோட், வட்டக்கச்சி, ரி.யோகநாதன், கறுக்காய்தீவு பூநகரி, எஸ்.லதாநந்தினி, முதலாம்கட்டை, பரந்தன், ரி.சிவகரன் கனகாம்பிகைகுளம் கிளிநொச்சி, எம்.விஷ்ணுதேவன், திருவையாறு கிளிநொச்சி, எஸ்.காயத்ரி 2ஆம் கண்டம் விசுவமடு, ஆர்.றஜனி பாலிநகர் வவுனிக்குளம், கே. உதயகுமாரன் வில்சன் றோட், கிளிநொச்சி, எஸ்.சஞ்சீவன் 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, கே. சங்கர் 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ஆர். சர்வேஸ்வரி பெரிய புளியங்குளம் ம.வி மாங்குளம், ர.சசிகுமார். 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, எஸ். சதாகரன சிலாவத்தை முல்லைத்தீவு, கே. சேரன் சில்வா றோட் வட்டக்கச்சி, எம். சண்முகநாதன் 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ஜே. சண்முகநாதன் 4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, ஜே. சண்முகநந்தும் 10 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ரி. சிவகுமார் வட்டுவாகல் முல்லைத்தீவு, வி. சிவனேசன் ஆலங்கேணி பூநகரி, எஸ் சிவரூபன் 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ஆர். சிவசிதம்பரம், புளியம்பொக்கணை, சீ.சிவசுப்பிரமணியம் 4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, கே. சிவசுப்பிரமணியம் 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ஆர். சிவனேசன், திருநகர் கிளிநொச்சி, கே.சிவகுமார் கண்டாவளை ம.வி கண்டாவளை, ரி. சிறிலதா கணுக்கேணி மேற்கு முள்ளியவளை, எஸ்.சுபாகரன், கணுக்கேணி கிழக்கு முள்ளியவளை, ஏ. சுப்பிரமணியம் 4 ஆம் வட்டாரம் முள்ளியவளை, பி.சுகந்தி 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, கே.சுகிர்தும் 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, பி.சுஜத்குமார் ஸ்கந்தபுரம் கிளிநொசி, எஸ். சுசித்திரா திருவையாறு கிளிநொச்சி, ஐ.சுதாஜினி கொக்காவில் றோட் துணுக்காய், ஏ.சுதர்சன் பாலிநகர் வவுனிக்குளம், சீ.தனலட்சுமி பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி, எஸ்.தாரணி கணேசபுரம் கிளிநொச்சி, வீ.தர்மினி கணுக்கேணி கிழக்கு முள்ளியவளை, கே. தர்சினி, கங்கபவனம்- துணுக்காய், ஆர். தர்சினி ஞானிமடம் பூநகரி, கே. தேவகி தருமபுரம் பரந்தன், என். திலீபன் கணுக்கேணி முள்ளியவளை,கே.துசிகரன், ஸ்கந்தபுரம், ஏ துஷ்யந்தி டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலை கிளிநொச்சி, எஸ். உதயகுமாரி 10 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, வி.வைகுந்தன் 4ஆம் கட்டை பூநகரி, எஸ்.எம். வலன்டினா இலங்கை வங்கி அருகாமை கிளிநொச்சி, எஸ் வர்தனி பரவிப்பாஞ்சான கிளிநொச்சி, வி. வத்சலா ஆறுமுகத்தான்குளம் குமுழமுனை முள்ளியவளை, பி.வி. விக்னராஜா கரும்புள்ளியான் நட்டாங் கண்டல், கே விஜயதர்சினி முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவு, எல். விஜய தேவி 5 ஆம் யுனிற் இராமநாதபுரம், பி. விஜிதா விசுவமடு, வி.விஜேஸ்வரி 8 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, எஸ். விஜோதா அந்தோனியார் கோவில் றோட் ஸ்கந்தபுரம், ரி.விஜியரஜினி 6 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, ஜே. விவேகநந்தராஜா கட்சன் றோட் வட்டக்கச்சி.



மட்டு.தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டில்

# சுனாமி எச்சரிக்கை கருவிகளை நிறுவ ஆஸி.யில் இன்று முதற்கட்டப் பேச்சு

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் சுனாமி அபாய அறிவிப்பை வழங்கும் கருவிகளை நிறுவுவதற்கான முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் அவுஸ்திரேலிய பேர்க் நகரில் இன்று ஆரம்பமாகவுள்ளன. யுனஸ்கோ சர்வதேச நாடுகளுக்கிடையிலான இணைப்புக் குழுக் கூட்டமாகவே இது இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்து சமுத்திர சுனாமி அபாய அறிவிப்புக் கருவிகளுக்கு அவசியமான தொழில் நுட்ப வளங்கள் தொடர்பாகவே இங்கு ஆராயப்படும். புவி மேற்பரப்பின் மாற்றங்கள் மற்றும் கடல்மட்டத்தின் மாற்றங்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரித்தல், ஆழ்கடலின் அழுத்தங்களை அவதானித்தல். அதன் மூலம் எதிர்வுகூறல்களை வெளியிடல் என்பன இதில் உள்ளடங்கும். இதற்கும் மேலதிகமாக சுனாமி தொடர்பாக மக்களுக்கு முன்கூட்டியே தகவல்களை வழங்குவதற்கான இயந்திர சாதனங்களை தொழில்நுட்ப உதவியுடன் நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முதற்கட்ட கலந்துரையாடலுக்கு அவுஸ்ரேலிய அரசாங்கமே முழு அனுசரணை வழங்குகிறது. இந்து சமுத்திரத்தில் சுனாமி அனர்த்தம் தொடர்பாக அபாய அறிவப்பை வெளியிட 24 மணித்தியாலமும செயற்படச் செய்வது இந்த செயல்த் திட்டத்தின் நோக்கமாகும்.. சிறிலங்கா சுற்றாடல் மற்றும் இயற்கை வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி இந்தக கூட்டத்தில கலந்து கொள்ளவுள்ளார். (32)

# விசேட சத்திரசிகிச்சை

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள வைத்தியகலாநிதி பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் நோர்வே நாட்டிலிருந்து வருகைதந்திருக்கும் சத்திரசிகிச்சை நிபுணரின் விசேட சத்திரசிகிச்சை கிளினிக் எதிர்வரும் வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறவுள்ளது.

குறிப்பாக கேணியா, மூல வருத்தம், கட்டிகள், வயிற்றில் இருந்து இரத்தம் வெளியேறல், குடற்புண் போன்றவற்றிற்கு நவீன கருவிகள் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. சத்திரசிகிச்சை தேவைப்படுவோருக்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பயன்பெற விரும்வோர் புதுக்குடியிருப்பு வைத்தியகலாநிதி பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையின் வெளிநோயாளர் பகுதியில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் ஊர்காவல்படைச் சிப்பாய் காயம்!

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊர்காவல் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார். இவர் சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை வவுனியா நகரில் இருந்து தென்மேற்குத் திசையில் 30 கிலோமீற்றர் தொலைவில் அனுராதபுரம் எல்லையில் உள்ள தந்திரி மலை இராணுவ முகாமுக்கு அண்மித்த பகுதியில் இந்த ஊர்காவல்படைச் சிப்பாய் வேட்டைக்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில், ஆள்நடமாட்டம் இருப்பதாகக் கண்ட படையினர் அந்தப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இந்த சிப்பாய் காயம் அடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர் தந்திரிமலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அனுராபஸ்நாயக்கா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் நால்வர் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியில் நேற்றுக் காலை 6-45இற்கு நான்குபேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெலிக்னைட், அமோனியம் உள்ளிட்ட வெடிபொருட்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்புட்டுள்ளனர். விசாரணைகள் தொடர்கின்றன.

(32)

# சிறிலங்கா படைத்துறை உயரதிகாரிகள் சிலர் இடமாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ உயரதிகாரிகளின் பதவி நிலைகள் சில மாற்றப்பட்டுள்ளன.

கொழும்பு நடவடிக்கைகள் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் வஜிர விஜேயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ உபகரணப்பிரிவு நிர்வாக ஜெனரலாக பணியாற்றிய அவர் அதற்கு முன்னர் இரு வருடங்களாக வெலிகந்த 23 ஆவது படைப்பிரிவின் கட்டளையதிகாரியாக பணியாற்றியிருந்தார்.

அதேநேரம் கொழும்பு நடவடிக்கைகள் கட்டளைத் தளபதியாக இருந்த பிரிகேடியர் பீ. சந்ரவங்ச திருமலை 22 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமலை மாவட்டத்தின் 22 ஆம் படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமித் பாலசூர்ய பட்டலந்த இராணுவ உத்தரவு மற்றும் பயிற்சிக்கல்லூரியின் நிறைவேற்று அதிகாரியாகவும் பிரிகேடியர் கரத் பெர்ணாண்டோ அநுராதபுரம் 21 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 21 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் நிஸ்ஸங்க விஜேசிங்க உபகரண நிர்வாக ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## முன்னாள்..

நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு தப்பியோடியுள்ளார்கள் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்தது.காயங்களுக்குள்ளான இவர் வெலிக்கந்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அங்கு உயிரிழந்தார்.

## தேசிய..

கப்பட்டபோதும் அது மக்கள் கலந்துகொள்வதில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. சிறிலங்கா பொலிஸ் நிலையம் அமைந்திருந்த பகுதிக்கு அண்மையாகவே இந் நேரக்கணிப்பு குண்டு வெடித்த போதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் இது தவறுதலாக வெடித்தகுண்டு என பொலிசார் கூறினர்.

## தமிழ்...

களின் தந்தையான நாராயணபிள்ளை ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை வணக்கத்திற்குரிய பிதா ஜோசப் மேரி அடிகளாரும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகமும் ஏற்றி வைத்தனர்.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான பி.அரியநேத்திரன், எஸ். ஜெயானந்தமூர்த்தி, பி.கனகசபை, தங்கேஸ்வரி கதிர்காமர் மற்றும் மதத்தலைவர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதி தம்பிட்டிய சுமணதேரரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. மாநாட்டின் இறுதியில் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட மக்களின் ஒருமித்த ஆதரவு பெறப்பட்டது.

படையினரின் மிரட்டல்களை ஒரு பொருட்டாக எடுக்காது மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தமிழ் தேசியத்தின் மீதான தமது பற்றை வெளிப்படுத்தினர். இம் மாநாட்டின் போது பெருமளவான சிறிலங்கா பொலிசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுகாதாரமற்ற 600இறாத்தல் பாண் கைப்பற்றப்பட்டு எரியூட்டல்!

*–வவுனியாவில் நேற்று சம்பவம்*

(செட்டிகுளம்)

வவுனியாவில் சுகாதார சீர்கேடுகளுடன் விநியோகிக்கப்பட்ட பாண் 600 இறாத்தல் நேற்று வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி கரியாலய சுகாதார பிரிவினரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பெயரில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டது

தற்போது வவுனியாவில் உள்ள வெதுப்பகங்கள், உணவகங்களில் உள்ள சுகாதார சீர்கேடுகள் தொடர்பாக கூடிய கவனம் எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு அமைவாக நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்கு அமைவாக படு மோசமான முறையில் பொதி செய்யப்பட்டு வாகனத்தில் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட பாண் மற்றும் பணிஸ் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது. 600 இறாத்தல் பாணும் 300 பணிசும் இதில் அடங்கும். விநியோகஸ்தர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக இந்தப் பொருட்கள் தீயிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

*-சுனாமி பாதித்த பகுதிகளில்-*

# நோர்வே எதிர்க்கட்சிப் பிரதிநிதி உதவித்திட்டங்கள் குறித்து பார்வை

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் நோர்வே அரசின் நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களினது நிலை தொடர்பாக ஆராய நோர்வே நாட்டின் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேரில் வருகை தந்துள்ளார்.

வடமராட்சியின் கரையோரக் கிராமங்களான பொலிகண்டி, பருத்தித்துறையின் முனை மற்றும் தும்பளைப்பகுதிகளில் நோர்வே அரசின் உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள படகு திருத்துமிடங்களை அவர் நேற்றுக்காலை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

எலன்ஹொஸ்ஸ்ராங் எனும் குறித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பின்னர் காலை 10.30 மணியளவில் வடமராட்சி வடக்கு மீனவசங்கங்களின் சமாச அலுவலகத்திற்கும் நேரில் விஜயம் செய்து மீனவ சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடியுள்ளார்.

அரசு புலிகளிற்கிடையேயான சுனாமிப்பொதுக்கட்டமைப்பு நீதித்துறையின் தலையீட்டிற்கு உள்ளாகியுள்ளதால் அதன் மூலமான பணிகள் தொடர்பில் தாங்கள் நம்பிக்கை இழந்திருப்பதாக தெரிவித்த மீனவ சங்கப் பிரதிநிதிகள் தற்போது சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீன்பிடிப்படகுகளை திருத்தம் செய்யவும் மற்றும் மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்யவும் நோர்வே அரசு நேரடியாக வழங்கிவரும் உதவிகளை தொடர்ந்தும் அவ்வாறே வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (27)

# பரந்தன் - முல்லை வீதியில் பாரவூர்தி தடம்புரண்டது!

## - மூவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் - முல்லை வீதியில் பார ஊர்தி ஒன்று தடம்புரண்டுள்ளது, மூவர் படுகாயமடைந்த நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை ஆறு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்றுகொண்டிருந்த பார ஊர்தி முரசுமோட்டை நான்காம் கட்டையடியில் உள்ள மதகு ஒன்றினுள் தடம்புரண்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த சிவலிங்கம் மோகனராசாவைக் கேட்டபோது சாரதி வேகமாக செல்ல முற்பட்டபோது பாரஊர்தி கட்டுப்பாட்டை இழந்து மதகு ஒன்றினுள் தடம்புரண்டது என்றும். நீண்டநேர முயற்சியின் பின்பு அயலில் உள்ள மக்களின் உதவியுடன் தாம் மீட்கப்பட்டதாகவும் கூறினார்.

இச்சம்பவத்தின்போது காயமடைந்தோரில் சி. யோகராஜா (வயது 34) உடையார்கட்டு தெற்கு, நா. துசியந்தன் (வயது 25) குமுழமுனை ஆகிய இருவர் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தீ)

## ஆறு...

கலாம் என நம்பப்படுகிறது.

எரிக்சூல்ஹெய்ம் தற்சமயம் நோர்வேயின் வெளிநாட்டமைச்சு ஆலோசகராக கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.அவர் நோர்வேயின் முன்னாள் அரசாங்கத்தினால் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.இதனையடுத்து அந்த நாட்டின் அரசாங்கம் மாற்றம் அடைந்தபோதும் எரிக்சூல்ஹெய்மை புதிய அரசாங்கமும் இலங்கையின் சமாதானத் தூதுவராக ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.